Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று 24-10-1993
24-10-1993

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 08 [24-10-1993] ஞாயிற்றுக்கிழமை ஓசை 248

## நாடக அரங்கப் போட்டி நாளை பரிசளிப்பு விழா

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், கரும்புலிகள் நாளையொட்டி நடாத்திய அரங்கப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலை, பண்பாட்டுக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு இ. ம. அன்பரசன் தலைமையில் நடைபெறவிருக்கும் இப் பரிசளிப்பு விழாவை யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு, மகளிர் படையணித் தளபதி செல்வி விதுஷா ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி ஆரம்பித்து வைப்பார்கள். கலை, பண்பாட்டுக் கழக மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி கலைமணி வரவேற்புரையும், கலை, (6ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகளின் உயிர்த்தியாகமே கிளாலி கடலில் மக்களை காக்கிறது

### தகைமை அடிப்படையில் பதவி உயர்வு

1990-ம் ஆண்டிலிருந்து 91-ம ஆண்டு ஜூன்மாதம் வரையிலான காலப்பகுதியில் அமுல் படுத்தப்பட்ட இனவிகிதாசார கொள்கை காரணமாக தமது பதவி உயர்வு வாய்ப்புகளை இழந்தவர்களுக்கு தகைமை அடிப்படையில் மீண்ம் பதவி உயர்வு வழங்கப்பட இருப்பதாக பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு விடுத்த சுற்றுநிருபம் ஒன்றல் தெரிவிக்கப்பட்டுள்ளது



## 'ராவய' செய்தியாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**கடற் புலிகளின் பாதுகாப்பின் மத்தியிலும் உயிர்த் தியாகங்களினாலும்தான் கிளாலிக் கடல் மார்க்கமான போக்குவரத்து நடைபெறுகின்றது. இவ்வாறு, அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய "ராவய" பத்திரிகையின் செய்தியாளர் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். சாதாரண பொதுமக்கள் கிளாலிக் கடல் நீரேரியைக் கடக்கும்போது கரும் கடற்புலிகள் தமது உயிர்களை தியாகம் செய்யும் நிலையில் இரு பககங்களிலும் நின்று பாதுகாப்பு கொடுக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.**

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; கடற்படையினரின் தாக்குதலிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்ற படகுகள் செல்லும் பாதையின் இருமருங்கிலும் கடற்புலிகளின் பல படகுகள் ரோந்து செல்கின்றன. மேலும் கடற் கரும்புலிகளையும் அப்பகுதியில் தயார் நிலையில் வைத்திருக்கின்றனர். கடற்படை படகுகள் தாக்கவரும்போது முழுமையாக வெடிமருந்து நிரப்பிய இப்படகுகளை மோதவிடுவதற்கு தயார் நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள்.

கடற்புலிகளின் பாதுகாப்பி (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பாதுகாப்பு; மருமகன் நியமிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக பிரதிப் பொலிஸ்மா அதிபராக தற்காலிக நியமனம் பெற்றுள்ள எஸ் எஸ் பி. மகிந்த பாலசூரியா நியமிக்கப் பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மிக அண்மையிலேயே பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்ற இவர் டி பி. விஜேதுங்காவின் மருமகன் ஆவார்.

முன்னர் ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்க பொறுப்பாக இருந்த சில உயர்அதிகாரிகள் ராஜினாமா செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதை அடுத்து அவர்கள் பதவி விலகியுள்ளனர்.

சிறிலங்கா ஜனாதிபதியின் பாதுகாப்பிற்கு மிக அண்மைக் காலத்தில் அதிகளவு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதா (6ஆம் பக்கம் பார்க்க)

## போராட்ட வரலாற்று புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் புகைப்படக்கண்காட்சி யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்த இக்கண்காட்சி இன்றும் நடைபெறும்.

மகளிர் படையணி தளபதி ஜவான், புகைப்படப்பிரிவு துணைப் பொறுப்பாளர் யோகன் நல்லூர் கொத்தணி அதிபர் இராமலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கைஏற்றி வைத்தனர் தமிழீழ கல்விக் கழகபொறுப்பாளர் இளங்குமரன் கண்காட்சியை திறந்து வைத்தார்

தமிழீழ போராட்ட வரலாற்றை எடுத்துக்கூறும் பல

## 'ராவய' பத்திரிகையாளரின் 17 நாள் வடபகுதி விஜயம்

### பி. பி. ஸியில் நீண்ட பேட்டி

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் அறிகுறிகள் எதுவும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை. இவ்வாறான நிலையில் சகல தடைகளுக்கு மத்தியிலும் 1983 ம் ஆண்டுக்குப்பின்னர் வடபகுதி

பெற்ற சமயம் சுமார் 17 நாட்கள் வடபகுதியில் தங்கியிருந்துள்ளனர். நந்தன வீரரட்ண, சுலங்கரட்ண மல்ல, சுனில் ஜயசேகரா, சில்வா ஆகிய நான்கு பத்திரிகையாளர்களுமே வடபகுதி சென்று திரும்பியவர்களாவர்

இவர்களில் நந்தன வீரரட்ண தனது அனுபவத்தை

ஒன்றின் மூலம் மடு தேவாலயத்துக்குச் சென்றோம். செல்லும் வழியில் பெரிய பண்டிவிரிச்சானில் விடுதலைப் புலிகளின் அறிவு என்ற உறுப்பினர் விசாரணைக்காக எம்மை இடைமறித்தார். பின்னர் அங்கிருந்து விடுதலைப் புலிகளின் துணையுடன் சிறிதுதூரம் பயணத்தை

மேலும் தெரிவிக்கையில்; கடற்படையினரின் தாக்குதலிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்ற படகுகள் செல்லும் பாதையின் இருமருங்கிலும் கடற்புலிகளின் பல படகுகள் ரோந்து செல்கின்றன.

யும் அப்பகுதியில் தயார் நிலையில் வைத்திருக்கின்றனர். கடற்படை படகுகள் தாக்கவரும்போது முழுமையாக வெடிமருந்து நிரப்பிய இப்படகுகளை மோதவிடுவதற்கு தயார் நிலையில் அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

மகன் ஆவார்.

(6ஆம் பக்கம் பார்க்க)



யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்ட வரலாற்றுச் சம்பவங்களை சித்திரிக்கும் கண்காட்சி திறப்புவிழா நிகழ்வில் மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா தேசியக்கொடியை ஏற்றிவைப்பதைப் படத்தில் காணலாம்.

## போராட்ட வரலாற்று புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் புகைப்படக்கண்காட்சி யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்த இக்கண்காட்சி இன்றும் நடைபெறும்.

மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார். நிதர்சனப் பொறுப்பாளர் ஜவான், புகைப்படப்பிரிவு துணைப் பொறுப்பாளர் யோகன் நல்லூர் கொத்தணி அதிபர் இராமலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கைஏற்றி வைத்தனர் தமிழீழ கல்விக் கழகபொறுப்பாளர் இளங்குமரன் கண்காட்சியை திறந்து வைத்தார்

தமிழீழ போராட்ட வரலாற்றை எடுத்துக்கூறும் பல புகைப்படங்கள் இக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

## 'ராவய' பத்திரிகையாளரின் 17 நாள் வடபகுதி விஜயம்

### பி. பி. ஸியில் நீண்ட பேட்டி

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் அறிகுறிகள் எதுவும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை. இவ்வாறான நிலையில் சகல தடைகளுக்கு மத்தியிலும் 1983 ம் ஆண்டுக்குப்பின்னர் வடபகுதி சென்று திரும்பிய நான்கு ராவய பத்திரிகையின் செய்தியாளர்களும் ''யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கை நடைபெற்ற சமயம் சுமார் 17 நாட்கள் வடபகுதியில் தங்கியிருந்துள்ளனர். நந்தன வீரரட்ண, சுலங்கரட்ண மல்ல, சுனில் ஜயசேகரா, சில்வா ஆகிய நான்கு பத்திரிகையாளர்களுமே வடபகுதி சென்று திரும்பியவர்களாவர்

இவர்களில் நந்தன வீரரட்ண தனது அனுபவத்தை பின்வருமாறு விபரிக்கிறார்; நாம் கொழும்பிலிருந்து புகைவண்டி மூலம் வவுனியா சென்றோம். அங்கிருந்து வான் ஒன்றின் மூலம் மடு தேவாலயத்துக்குச் சென்றோம். செல்லும் வழியில் பெரிய பண்டிவிரிச்சானில் விடுதலைப் புலிகளின் அறிவு என்ற உறுப்பினர் விசாரணைக்காக எம்மை இடைமறித்தார். பின்னர் அங்கிருந்து விடுதலைப் புலிகளின் துணையுடன் சிறிதுதூரம் பயணத்தை மேறகொண்டோம் பெரிய பண்டிவிரிச்சானில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முதலிரண்டு வழக்குகளுக்கு தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோவில் வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில் உடன் இரண்டு வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஏகமனதாக தீர்ப்பு வழங்கப்பட்டன.

வழக்கு Iஇல் சிவன் கதிரேசன் (யாழ்ப்பாணம்) என்பவர் அதே வீதியில் அமைந்துள்ள சுபாஸ்கபே கடையை உடைத்து ரூபா 3500 பெறுமதியான பொருள்களை களவாடியுள்ளார். இதற்கு தண்டனையாக ரூபா 600 செலுத்த வேண்டும். தவறின் ஒரு மாத கட்டாய சமூக சேவை செய்ய வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கு IIகுமரன் மகேந்திரன் என்பவர் பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள தம்பையையா புனிதவதி என்பவரிற்கு சொந்தமான கடையை உடைத்து ரூபா 1500 பெறுமதியான பொருள்களை களவாடியுள்ளார். இவரிற்கு தண்டனையாக ரூபா 300 செலுத்த வேண்டும் எனவும் தவறின் ஒரு மாத கட்டாய சமூக சேவை செய்ய வேணடும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்விரண்டு வழக்குகளின் குற்றவாளிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து திரு மயூரன், திரு. சுடர், திரு. இசையமுதன் ஆகிய மூன்று நீதிபதிகளாலும் ஏகமனதாக மேற்படி தீர்ப்புகள் வழங்கப்பட்டன. [பா]

## இனவிகிதாசாரப்படியே பல்கலைக்கழக அனுமதி

### டி. பி. விஜேதுங்கா தெரிவிப்பு

[கொழும்பு]

பல்கலைக்கழக அனுமதியில் இனவிகிதாசாரம்கடைப்பிடிக்கப்பட வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார்

பல்கலைக்கழக அனுமதிக்கான க. பொ. த. உயர்தர வகுப்பு பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு நியாயம் வழங்கக் கூடிய வகையிலும் அவர்கள் மத்தியில் காணப்படும் விரக்தியை குறைக்கக் கூடிய வகையிலும் தற்போதைய பல்கலைக்கழக அனுமதி முறை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; பல்கலைச்கழக அனுமதியில் தகுதிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். பல்கலைக்கழக அனுமதியில் இன்றுள்ளது போலசிறப்புத்தகைமை இரண்டாம் இடத்தில் இருக்கக் கூடாது. தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். ஆனால் நாட்டில் நிலவும் இனவிகிதாசார முறையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். கல்வி அடிப்படையில் வசதி குறைந்தவை என்று குறிப்பிடப்படும் மாவட்டங்கள் என்றென்றைக்கும் இதுபோன்றே இருந்துவிடக் கூடாது. அந்த மாவட்டங்களும் கூட போட்டா போட்டித் துறையில் பிரவேசிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் இதன் காரணமாக தனது சொந்தத் திறமையின் காரணமாக பல்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

(நமது நிருபர்)

யாழ் கோவில் வீதியில் யாழ்ப்பாணம் தமிழீழ மாவட்ட நீதிமன்றம் நேற்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10. 00மணியளவில் ஆரம்பமாகிய இந் நீதிமன்ற திறப்பு வைபவத்தில் ''பான்ட்'' இசை முழங்க மங்கள விளக்கை தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. செந்தாளன் ஏற்றிவைத்தார் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஏற்றிவைத்தார் அதனை அடுத்து நீதிமன்றத்தை யாழ்மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

இந் நீதிமன்றம் ஆரம்பித்த உடன் இரண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டன இந் நீதிமன்ற நீதிபதிகளாக திரு. மயூரன், திரு. சுடர், திரு. இசையமுதன் ஆகியோர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். [பா]

## இன்றும் நாளையும் படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்தற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மண்மீட்புப் போருக்கென

## மனமுவந்து மக்களை இணைக்கும் பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

மண் மீட்புப் போரில் தமது பிள்ளைகளை பெற்றோரே மனமுவந்து இணைத்து வரும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

நாவாந்துறை ஒஸ்மானியா வீதியைச்சேர்ந்தராஜேந்திரன் அவரது சகோதரி விஜயா ஆகிய இருவரும் நேற்று தமது பெற்றோரின் சம்மதத்துடன் போராட்டத்தில் இணைந்து கொண்டனர் இவர்களின் குடும்பத்தில் மூவர் ஏற்கனவே போராளிகளாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் மாணாவளை மட்டுவிலைச்சேர்ந்த மகேஸ்வரி செல்லையா எனும் தாயார் தனது மகன் சுரேஷை போராட்டத்தில் இணைத்துள்ளார் மேலும் புங்குடுதீவைச்சேர்ந்த அல்றிண்டா என்பவரை அவரது தந்தையார் அல்பிரைட் கடற்புலிகள் முகாமில்வைத்து போராட்டத்தில்இணைத்துள்ளார்.

## பதவி உயர்வில் அரசியல் பொலிஸ் அதிகாரி கவலை

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் திணைக்களத்தில் பதவியுயர்வுகள் வழங்குவதில் அரசியல் பின்னணியிருப்பதாக பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் பின்னணியில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதால் திறமையற்றவர்களுக்கு மேற்படி பதவிகள் வழங்கப்படுகின்றன. இதனால் திறமை வாய்ந்தவர்கள் குறிப்பிட்ட தமது சேவைக் காலத்திற்கு முன்னதாகவே தமது பதவியை விட்டு ஓய்வு பெற்றுவிடுவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மனித உரிமையை மீறிய பலருக்கு பதவி உயர்வு வழங்கப்படுவதினால் பொலிஸ் திணைக்களத்தின் பெயருக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் சேவை அரசியலில் இருந்து விடுபட்டால் மட்டுமே திறமையாக செயல்படமுடியும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## களுத்துறை சிறைகைதிகளை செஞ்சிலுவை பார்வையிடும்

[கொழும்பு]

கொழும்பு மகஸின், களுத்துறைச் சிறைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 800 பேரைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதில் 12 பெண்களும் அடங்குவார்கள். தடுப்புக்காவலில் என்ன நிலையில் இவர்கள் இருக்கின்றார்கள் என்பதை இக்குழுவிற்கு காட்டுவதே

[6ஆம் பக்கம் பார்க்க]

**தமிழா!**

உலகம் வியக்கும் தலைவனே
எமக்குப் படை நடத்துகின்றான்
பூவா தலையா போட்டுப் பார்க்காதே!
புறப்படு வெற்றி எங்கள் பக்கம் தான்.

## வரி விளம்பரம்


### யாழோசை இசை வகுப்புகள்

சகல புதிய இசை வகுப்புகளும் 24-10-93 விஜயதசமியன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். யாழோசை 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(6306)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டு தரப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம்.
(6326)

### "வீட்டுத்தோட்டப்போட்டி"

போட்டியில் வெற்றி ஈட்டச் ''சக்தி'' இயற்கைப்பசளை. கூட்டெரு முறையில் தயாரித்தது. மண்வளம் பெருக்கி விளைச்சலை அதிகரிக்கின்றது பக்கற் ஒன்று விலை ரூ. 9/-25 பக்கற் கொண்ட பெட்டி ஒன்று ரூபா 200/- மட்டுமே அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது.
''மில்க்வைற்''
(சி7765]

### புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்து விட்டது! ஆவலோடு எதிர்பார்த்த புலமைப் பரிசில் நவீன பயிற்சி நூல் 20 நவீன'கட்டுரைகளையும் கணித, தமிழ்ப் புதிர்களையும் 10 மாதிரி வினாத் தாள்களையும் விடைகளுடன் கொண்டது. கிடைக்குமிடம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி7773)

### விற்பனைக்குண்டு

No. 6 றக்கா றோட்டில் 2 பரப்பு - 3 குழி காணி விற்பனைக்குண்டு: தொடர்பு; அ. எமிலி, 143/1 ஸ்ரான்லி றோட். அத்தியடி யாழ்ப்பாணம்.
(6365)


## வெளியீடு

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி லியோ கழகத்தினர் வெள்ளைப் பிரம்பு தினவிழாவை கடந்த (22 - 10 - 1993)

## மரம் நடுகை வாரம் செவ்வாயன்று ஆரம்பம்

கடந்த வருடத்தினைப் போலவே இந்த வருடமும் மர நடுகையை ஊக்குவிக்கும் முகமாக ஒக்டோபர் இருபத்தாறாம் திகதி தொடக்கம் நவம்பர் முதலாம் திகதி வரையான காலப்பகுதி மரம் நடுகை வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

குடாநாட்டில் மட்டும் கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட மரம்நடுகை வாரமானது இவ்வருடம் வட தமிழீழம் எங்கும் பரவலாக நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மரம் நடுகை வாரத்தில் மக்கள் மரநடுகையில் முழுமூச்சாக ஈடுபடுவதோடு, முன்னர் நடுகை செய்யப்பட்ட மரங்களுக்கு அமைக்கப்பட்டுள்ள கூடுகளை திருத்துதல். புதிய கூடுகளை அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களை சார்ந்த அனைவரையும் மர நடுகை வாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அக்காலப் பகுதிக்குள் திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகளை நடுகை செய்வது தொடர்பான கடமைகளில் ஈடுபடுமாறும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை

1993/94 கால போகத்திலே நிலக்கடலைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக இதனைப் பயிரிடும் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

பயிரினது முக்கியமான வளர்ச்சிக் காலத்தில் வரட்சி நிலவுமாயின் பயிர் வளர்ச்சியினைப் பாதிக்காதவாறு நீர்ப்பாசனம் செய்வதற்கு ஏதுவாகவே மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நிலக்கடலைப் பயிரினைக் கூடுதலாக தென்மராட்சிக் கோட்டங்களிலே உள்ள இளம், முதிர்ந்த தென்னந்தோட்டங்களிலே ஊடு பயிராக செய்கை பண்ணுவதன் மூலம் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### விசேட அறிவித்தல்

**22-10-93ஆம் திகதி நல்லூர் கிளை நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய நூல்களின் கண்காட்சி அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இன்று 24 - 10- 93ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணிவரை நீடிக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.**

பிரதம நூலகர்
மாநகரசபை ஆணையாளருக்காக,
மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்.
(சி-7772)

### யாழ்ப்பாணக் கல்லூரி

JAFFNA COLLEGE 1823 1872 CEYLON


## வாணி விழா

[தொல்புரம்]
தொல்புரம் அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன்பாடசாலையில் இன்றுகாலை8 30மணியளவில் அதிபர் திரு. வி ந சிறிதரன் அவர்கள்தலைமையில் சரஸ்வதிபூசைநடைபெறவுள்ளதுஇந் நிகழ்வில் வாணி வழிபாட்டினைத் தொடர்ந்து பாடசாலை மாணவ, மாணவியரின் பேச்சு, கவிதை, நடன, நாட்டியநிகழ்ச்சிகள் வழமைபோல் நடைபெறவுள்ளன [41]

★

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் விஜயதசமி நாளான இன்று முற்பகல் வாணிவிழா நடைபெறவுள்ளது. (41)

★

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று விஜயதசமி, மானம்பூ உற்சவம் வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது. (41)

★

சங்கானை அருள்மிகுநிகரை ஞானவயிரவர் ஆலயத்தில் விஜயதசமி நாளான இன்று மானம்பூ, விஜயதசமி உற்சவம் வழமைபோல் நடைபெறவுள்ளது. (41)

★

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் விஜயதசமி நாளான இன்று சரஸ்வதி பூசையும், விஜயதசமி நிகழ்ச்சிகளும் கல்லூரியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளன. [41]

புதிய கல்வி நிலையத்தின் நவராத்திரி விழா இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் நாவலர் வீதியிலுள்ள நிலையத்தில்நடைபெறவுள்ளது. சக்தி வழிபாடும் நாடும் என்னும் பொருள்பற்றிய சிறப்புரையுடன் சக்தி வழிபாடு பிரார்த்தனை என்பன இடம்பெற இருப்பதுடன் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சி நூலும் வெளியிடப்படவுள்ளது.

### வித்தியாரம்பம்

கல்வியங்காடு தமிழ்த்தாய் மன்றத்தின் தமிழ்த்தாய் அலுவலகத்தில் மாற்றம் சஞ்சிகையினரால்இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வித்தியாரம்பம் செய்து வைக்கப்படும் என அறிவிக்கப்படுகின்றது

## 8 மாதத்தில் பயன்பெறக்கூடிய பப்பாசி இனம் அறிமுகம்

வெளிநாட்டிலிருந்து கேணல் கிட்டு அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட புதிய இன பப்பாசிவிதைகள் மேஜர் பிரதாப் செட்டி மாதிரிப் பண்ணையில் பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்டது. மேற்படி முயற்சியானது பெரு வெற்றியளித்துள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

விதைகள் நடப்பட்டு மூன்றாம் மாதத்திலே பூக்கள் உருவாகி எட்டுமாத காலத்திலே பழங்களை பெறக்கூடியதாக உள்ளது.

அண்மையில் மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையிலே நடப்பட்டிருந்த மரத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டிருந்த ஒவ்வொன்றும் சுமார் 12 கிலோ எடையுள்ள பப்பாசிப் பழங்கள் எல்லோரையும் வியப்பிலே ஆழ்த்தியுள்ளன. இவை இங்கு சாதாரணமாகக் கிடைக்கின்ற பப்பாசிப் பழங்களைப்போல் 10 மடங்கு எடையுடையவையாக அமைந்திருந்தன, எனவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தற்போது இந்தப் பழங்களிலிருந்து பெறப்பட்ட விதைகளில் இருந்து கன்றுகளை உருவாக்கி மேஜர் பிரதாப்செட்டி மாதிரிப் பண்ணையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மண்மீட்புப் போருக்கு பெற்றோர் மகளை இணைத்தனர்

(யாழ்ப்பாணம்)
மட்டுவில் வடக்கைச் சேர்ந்த ஒரு தாயும், தந்தையும் தமது மகளை மண் மீட்புப் போரில் இணைத்துள்ளனர்.

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து மட்டுவிலில் வசித்து வரும் திரு சவுந்தரம் என்பவரும் அவரது மனைவியாரும் தமது மகள் வாணி என்பவரை விடுதலைப் புலிகள் மகளிர் படையணியிடம் மனப்பூர்வமாக கடந்த திங்களன்று ஒப்படைத்துள்ளனர்.

## இந்து மத நிறுவனங்கள் சமூக பணியில் ஈடுபடுக

– தங்கம்மா அப்பாக்குட்டி

(யாழ்ப்பாணம்)
இன்றைய சூழ்நிலையில் அனைத்து இந்து மத நிறுவனங்களும் ஏதாவது ஒரு சமூகப் பணியில் ஈடுபடும் வகையில் அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ்வாறுசிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

நல்லை ஆதீன மண்டபத்தில் இந்து சமய பேரவையின் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இந்துமத நிறுவனங்கள் சமயப் பணியை தீவிரப்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது, மற்றவர்களின் குறைகளைப் பேசுவதை விடுத்து நிறைகளைக்கண்டு மகிழ நாம் பழகிக் கொள்ள வேண்டும். இந்துமத தத்துவங்களை போதிப்பதற்கும் பயிற்றுவதற்கும் கலாசாலைகளை நாம் நிறுவ வேண்டும். இன்றைய போர்ச்சூழ்நிலையில் ஆலயங்கள் இடிக்கப்படுவதுடன் மக்களும் அநாதைகளாக்கப்படுகின்றனர். இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் இந்து சமய பேரவை தயங்காது ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.


### 5-ம் ஆண்டு நினைவு அலைகள்



மலர்வு
22. 10. 1966

வீரச்சாவு
24: 10 1988

**கப்டன் சதீஸ்**
**முத்ததம்பி- தெய்வேந்திரம்**

'' செங்களங்குருதி சிந்தி
சென்றனை வரணி மண் தந்த
எங்களின் குல விளக்கே
என்றும் நீ அணைவதுண்டோ
தங்கநின் திரு முகத்தை - விண்ணில்
தாரகை பூத்து நிற்கும்
உன்னரிய தோழர் பாதச்சுவட்டில்
உறுதியுடன் இணைத்தனரோ ''

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதர
சகோதரிகள். அண்ணிமார்.

நாவற்காடு. வரணி

(6346)

### நினைவு கூருகின்றோம்...
1993- 10 24

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை திரியாய் கொடியாற்றுப் பகுதியில் எமது முகாமொன்றைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**முகமட்** (கணபதிப்பிள்ளை சௌந்தரராசன் - அன்புவழிபுரம் - திருமலை)

1986ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லிங்கன்** (கிருஷ்ணபிள்ளை சொர்ணலிங்கம் - குமரபுரம் பரந்தன் -கிளிநொச்சி

களையும் 10 மாதிரி வினாத் தாள்களையும் விடைகளுடன் கொண்டது. கிடைக்குமிடம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி7773)

### விற்பனைக்குண்டு

No. 6 றக்கா றோட்டில் 2 பரப்பு - 3 குழி காணி விற்பனைக்குண்டு: தொடர்பு; அ. எமிலி, 143/1 ஸ்ரான்லி றோட். அத்தியடி யாழ்ப்பாணம். (6365)

## வெளியீடு

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி லியோ கழகத்தினர் வெள்ளைப் பிரம்பு தினவிழாவை கடந்த (22 - 10 - 1993) வெள்ளிக்கிழமை கொண்டாடினர். கழகத்தலைவர் லியோ க ஜெயநிதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'வெள்ளைப் பிரம்பின் மகத்துவம்' என்னும் நூல் வெளியீடும் இடம்பெற்றது. அத்துடன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன் சு. இராமகிருஷ்ணன் அவர்கள் யாழ்.விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்களுக்கு வெள்ளைப் பிரம்புகளையும் அன்பளிப்புச் செய்தார்.

### கண்டெடுப்பு

திருநாவுக்கரசு நகுலேஸ்வரி அளவெட்டி என்பவரது அடையாள அட்டை கிளாலியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

22-10-93ஆம் திகதி நல்லூர் சின்ன நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய நூல்களின் கண்காட்சி அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இன்று 24 - 10- 93ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பிரதம நூலகர்
மாநகரசபை ஆணையாளருக்காக,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(சி-7772)

## யாழ்ப்பாணக் கல்லூரி

464, ஆஸ்பத்திரி வீதி, (வர்த்தக வங்கிக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

## பட்டப்படிப்புகள் பிரிவு
### பேராதனைப் பல்கலைக்கழக முதற்கலைத் தேர்வு G. A. Q-1995 விரிவுரைகள் 1-11-1993இல் ஆரம்பமாகின்றன

★ க. பொ. த (உயர்தர)ப் பரீட்சையில் (G.C.E. A/L) 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ மாணவர்கள் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளவும். (வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்)

(சி-7771) - பதிவாளர்

ஈழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

விதைகள் நடப்பட்டு மூன்றாம் மாதத்திலே பூக்கள் உருவாகி எட்டுமாத காலத்திலே பழங்களை பெறக்கூடியதாக உள்ளது.

அண்மையில் மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையிலே எடையுடையவையாக அமைந்திருந்தன, எனவும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தற்போது இந்தப் பழங்களிலிருந்து பெறப்பட்ட விதைகளில் இருந்து கன்றுகளை உருவாக்கி மேஜர் பிரதாப்செட்டி மாதிரிப் பண்ணையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மண் மீட்புப் போருக்கு பெற்றோர் மகளை இணைத்தனர்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த ஒரு தாயும், தந்தையும் தமது மகளை மண் மீட்புப் போரில் இணைத்துள்ளனர்.

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து மட்டுவிலில் வசித்து வரும் திரு சவுந்தரம் என்பவரும் அவரது மனைவியாரும் தமது மகள் வாணி என்பவரை விடுதலைப் புலிகள் மகளிர் படையணியிடம் மனப்பூர்வமாக கடந்த திங்களன்று ஒப்படைத்துள்ளனர்.

## நன்றி நவிலல்

20-10-1993இல் எமை விட்டுப்பிரிந்த இரத்தினம் பாக்கியம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரில் வந்து கலந்து கொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள் யாழ்-போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் மாணவ, மாணவிகள், சகல விதங்களிலும் உதவி அருளிய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போமாக!

இரத்தினம் குடும்பத்தினர்.

சங்கத்தானை
சாவகச்சேரி, (6367)

## "ஸப்தஸ் வரம்"
### புதிய இசை வகுப்புகள் ஆரம்பம்

- ஓகன்
- கிற்றார்
- ட்றம்ஸ்
- தபேலா
- கொங்கோட்றம்ஸ்
- பொங்கோஸ்
- மிருதங்கம்

**இன்று (விஜயதசமி) காலை 9.00 தொடக்கம் மாலை 6. 30 வரை நடைபெறும் ஒரு சிலமாதங்களில் நீங்களும் சிறந்தஇசைக் கலைஞராகலாம்**

ஸப்தஸ் வரம் இசைக்கல்லூரி
200/1, கண்டி வீதி
அரியாலை பார்வதி வித்தியாசாலை முன்பாக
அரியாலை, யாழ்ப்பாணம்

ஸப்தஸ்வரா
இலக்கம். 38, அரசவீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

(6364)

தாரகை பூத்து நிற்கும்
உன்னரிய தோழர் பாதச்சுவட்டில்
உறுதியுடன் இணைத்தனரோ''

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதர
சகோதரிகள். அண்ணிமார்.

நாவற்காடு. வரணி
(6346)

## நினைவு கூருகின்றோம்...
## 1993- 10 24

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை திரியாய் கொடியாற்றுப் பகுதியில் எமது முகாமொன்றைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**முகமட்** (கணபதிப்பிள்ளை சௌந்தரராசன் - அன்புவழிபுரம் - திருமலை)

1986ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லிங்கன்** (கிருஷ்ணபிள்ளை சொர்ணலிங்கம் - குமரபுரம் பரந்தன் -கிளிநொச்சி

1987ஆம் ஆண்டு மட்டு - வடமுனையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் றதீஸ / றதி** (நல்லதம்பி முத்தழகு - வாழைச் சேனை - மட்டு)

யாழ்- கல்லுண்டாய் வெளியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கரன்** (இரத்தினம் பபிகரன் -5/1, ஆனந்தன்வடலிவீதி, கொழும்புத்துறை - யாழ்)

யாழ் - கல்வியங்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**அ. செல்லச்சாமி**

யாழ் - பொன்னாலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டுநகரில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நீதிமன்ற ஊழியரான தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**மேஜர் கெஸ்றி** (ஏகாம்பரம் பன்னீர்ச்செல்வன் - 4 ம் வட்டாரம் -புங்குடுதீவு)

சாவகச்சேரி பொதுச்சந்தை மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட நாவாந்துறையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டுநகரில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு புகையிரத நிலைய விடுதி வாசியான தமிழர்

1991ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**அன்ரனி** (அன்ரனி தாஸ் - சிவத்தப்பாலம்வெளி - மட்டு)

1992ஆம் ஆண்டு மணலாறு மண்கிண்டிமலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**இறையன் / ராம்குமார்** (செல்வரட்ணம் நாகேந்திரன்- இலுப்பையடிச்சேனை - மட்டு)

**லெப். இறைகுமார் / நசார்** (குமாரசாமி தவராசலிங்கம் மிருசுவில் வடக்கு கொடிகாமம்)

**2-ம் லெப் நெடுமாறன் / குமரேஸ்** (கிருஷ்ணபிள்ளை கிருபாகரன் - புலோலி - பருத்தித்துறை)

மட்டு - பாலையடிவெட்டை, வெல்லாவெளிமுகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டும், வெட்டியும், கொத்தியும் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7769)

உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஐப்பசி மாதம் 9ஆம் நாள் (25-10-93) திங்கட்கிழமை பகல் 9-45 — 11-44 மணி வரை வரும் சித்த யோகமும் சதய நட்சத்திரமும் கூடிய சுபவேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**கணேசன்**<br>சுந்தரம் ஸ்ரோர்ஸ்<br>கொக்குவில் மேற்கு, கேணியடி<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**தீபனி**<br>அவர்களுக்கும் |

வண்ணை விஸ்வலிங்கப் பிள்ளையார் (முருகமூர்த்தி பிள்ளையார்) ஆலயத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்று பிற்பகல் 3,00-5.30 மணிவரை மணமகள் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி கு. காளிமுத்து தேவர்
39/22, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி-7774)

திரு. திருமதி கு. சுப்பிரமணியம்தேவர்
''நாயகி புரடெக்ஸ்''
வட்டுக்கோட்டை

## பல்கலை. அனுமதி விண்ணப்பம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதியானவர்களுக்கான முதலாவது விண்ணப்பப்படிவம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மேற்படி மாணவர் கள் பல்கலைக்கழகஅனுமதிக்கான முதலாவது விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் இவ் விண்ணப்பப் படிவங்களை கொழும்பில் இருந்து எடுத்து வந்து விநியோகிப்பதற்கு தாம் நடவடிக்கை எடுத்து வருவதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் தெரிவித்தார். (க) (நி)

# காங்கிரசுடன் கூட்டுச்சேர ஈழத் தமிழருக்கு துரோகம்

## கருணாநிதி மீது குற்றச்சாட்டு

(சென்னை)

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்வதற்காக தமிழீழத்தை தான் ஆதரிக்கவில்லை என தி. மு. க தலைவர் மு. கருணாநிதி கூறியிருப்பது முழுத் துரோகத்தனமானது என முன்னாள் தி மு.க எம். பியும் தற்போது பாட்டாளி மக்கள் கட்சியில் உள்ளவருமான நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

தனி ஈழத்தை தான் ஆதரிக்கவில்லை என அண்மையில் கருணாநிதி கூறி தமிழ் மக்களிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். இலங்கையில் துன்பத்திற்குள்ளாகியிருக்கும் தமிழர்கள் தமது பிரச்சினைக்குதீர்வுகாண தமிழக மக்களையே பெரிதும் நம்பியுள்ளனர். இந்நிலையில் தமிழீழத்தை தான் ஆதரிப்பதில்லை என கருணாநிதி கூறியிருப்பது சிங்கள இராணுவத்துடன் போராடிவரும் தமிழருக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்றும் கிருஷ்ணமூர்த்தி மேலும் எச்சரித்துள்ளார்.

ஏயர்பஸ் கொள்வனவு

## ஒப்பந்தம் ரத்தானால் ஒன்பது கோடிடாலர் நட்டம்

ஏயர்பஸ் கொள்வனவிற்கான ஒப்பந்தத்தை இரத்து செய்வதானால் ஏயர் லங்கா நிறுவனத்திற்கு ஒன்பது கோடி டாலர் நட்டம் ஏற்படுமென அது தொடர்பாக ஆராய்ந்த குழு கருத்து தெரிவித்துள்ளது.

ஏயர்பஸ் ஒப்பந்தம் தொடர்பாக ஆராய அரசினால் நியமிக்கப்பட்ட குழுவே மேற்படி கருத்தை அண்மையில் பாராளுமன்றத்திற்கு தெரிவித்துள்ளது.

ஆனால் இவ்வாறு ஒப்பந்தத்தை இரத்து செய்வதன் மூலம் ஒன்பது கோடி டாலர் நட்டம் ஏற்படும் என்று கூறும் அக்கமிட்டி எதனால் இவ்வளவு தொகை நட்டம் ஏற்படுகிறது என்பதை சுட்டிக்காட்டவில்லையாம்

## வீதி விளக்குகளுக்கு ஒரு வருடம் பூர்த்தி

இராணுவ நடவடிக்கையினால் மின்சாரம் முழுமையாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ் நகரில் வீதி விளக்குத் திட்டம் ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஆரம்பத்தில் யாழ் நகரின் பிரதான சந்திகளில் ஒருசில விளக்குகள் மட்டும் பொருத்தப்பட்டிருந்தன.

## தொழில்நுட்பக் கல்லூரி விண்ணப்பங்கள்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு 1994ஆம் கல்வி ஆண்டுக்குரிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் நலன்புரிச் சங்கத்தினால் மேற்படி கல்லூரியில் வைத்து இவ்விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (க) (நி)

## வகுப்புகள்

ஆறுமுக நாவலர் தர்மகர்த்தா சபையினரால் இன்று காலை ஒன்பது மணியளவில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இலவச பண்ணிசை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதில் பங்கு பற்ற விரும்புவோர் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

## கட்டடக்கலை கற்கைக்கு விண்ணப்பம்கோரப்படுகிறது

(கொழும்பு)

மொறட்டுவப் பல்கலைக் கழகம், கட்டடக்கலை (விஞ்ஞானமாணி) கற்கைநெறிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது. கல்வியாண்டு 1993,94 க்கே இந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆகஸ்ட் 1992 க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் நான்கு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம். அல்லது மேற்படி பரீட்சையில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தியடைந்து நான்காவது பாடத்தில் 25 சதவிகிதத்துக்குக் குறையாத புள்ளி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். அத்துடன் நான்கு பாடங்களிலும் 180 க்குக் குறையாத சராசரிப் புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி ஒக்ரோபர் 27, 1993 ஆகும்.

## உறுப்பினர் சடலம்

கடந்த வாரம் நீர்கொழும்பு பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சடலங்களில் ஒன்று ஈ. பி ஆர். எல். எப்பைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் அக்கரைப்பற்றுவை சேர்ந்த ரவீந்திரராஜா திருநாவுக்கரசு என்று அவரது மனைவியால் அடையாளம்காணப்பட்டார்


## நெஞ்சம் நெகிழும் 31-ம்நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### முருகேசு ஸ்ரீபத்மநாதன்

[ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற பதிவாளரும், வெல்லன் பிள்ளையார் முகாமையாளரும்]

மண்ணில் 16- 04- 1931 விண்ணில் 24- 09- 1993

எங்கள் குடும்ப கலங்கரை விளக்கத்தின் 31-ம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி சபீண்டி கரண கிரியைகளும் 25. 10. 1993 திங்கட் கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரது மறைவின் போது எமது துயரில் பங்கேற்

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் 30ஆம் நாள் (15-11-1993) திங்கட்கிழமை காலை 9.18 மணிமுதல் 10.23 மணி வரையுள்ள சுப மங்கள வேளையில்,

காரை நகரைச் சேர்ந்த

காரைநகரைச் சேர்ந்த,
கிளிநொச்சி, சாந்தி வைத்தியசாலை உரிமையாளர்
டாக்டர் கிருஷ்ணர் சுப்பையா
(கொத்மலை உடகெந்தனை பகுதிகளைச் சார்ந்த
பெருந்தோட்டத்துறை முன்னாள்
தலைமை வைத்திய அதிகாரி)

திரு. திருமதி
அ அப்புத்துரை அவர்களின்
சிரேஷ்ட புதல்வன்

திருமதி
சிவபாக்கியம் சுப்பையா தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி

**குகதாசன்** ★ **கலாமதி**

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்
வர்த்தக முகாமையாளர் கு. இல. 106:07

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத் திட்டம்:- ரூ. 1105/- — 2170/- / 60X4; 75 x 11

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 8ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை மட்டப் பதவி அல்லது அத்தகைய மேற்பார்வை மட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் மூன்று வருடத்துக்குக் குறையாத அநுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின்9-வது சம்பளத் திட்டத்தில் மேற்சொல்லிய வண்ணம் ஆறு வருடங்களுக்குக் குறையாத அநுபவம்.

அல்லது:

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி அல்லது அதற்கிணைந்த தகைமைகளுடன், சந்தைப்படுத்தல்/வழங்கல் பொருள் விநியோகம்/பொருட்களின் இறக்குமதி ஏற்றுமதி என்ற துறைகளில்ஒன்று அல்லது மேற்பட்டனவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அநுபவம்.

அல்லது:

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) / க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் சந்தைப்படுத்தல்/வழங்கல் பொருள் விநியோகம்/பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி என்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அநுபவம்.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை:- உரொக்கம் ரூ. 4,420/-
ஆதனம் ரூ. 15,000/-



அமரர்

## முருகேசு ஸ்ரீபத்மநாதன்

[ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற பதிவாளரும், வெல்லன் பிள்ளையார் முகாமையாளரும்]

**மண்ணில்** 16- 04- 1931 — **விண்ணில்** 24- 09- 1993

எங்கள் குடும்ப கலங்கரை விளக்கத்தின் 31-ம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி சபீண்டி கரண கிரியைகளும் 25. 10. 1993 திங்கட் கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அன்னாரது மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம்.

கொய்மனுவளவு
கரவெட்டி மேற்கு
கரவெட்டி. (6360)

பிரிவினால் துயருறும்
திருமதி. ம. ஸ்ரீபத்மநாதன்
குடும்பத்தினர்

## 47-ம் நாள் என் நினைவாக...



தாயின் மடியில்: 29 - 9 - 1975

வீரச்சாவு: 09 - 09- 1993

லெப்டினன்ட்

## செல்வன் (அனந்தன்)

[முருகேசம்பிள்ளை சரவணபவன்]

களபூமி, காரைநகர்
(சீனியர் லேன், கலட்டி)

09-09-1993 அன்று பூநகரி வாடியடிச் சந்தியில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் ஏறிகணைத் தாக்குதலின் போது வீரச்சாவைக் தழுவிக்கொண்ட எமது மைந்தனின் புகழுடலிற்கு இறுதிஅஞ்சலிக்குகலட்டி சீனியர் லேனில் உள்ள எமது இல்லத்திற்கு வருகைதந்த போராளிகள் அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு எமக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மனம் நிறைவடைகிறோம்.

நாளை 25-10-1993இல் எமது மைந்தனின் 47ஆம் நாள் நினைவு தினத்தன்று கலட்டி சீனியர் லேனில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிரியைகளிலும் தொடர்ந்து வழங்கவிருக்கும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்.

இல. 56, சீனியர் லேன்.
கலட்டி. (6353)

ணப்பப்படிவங்கள் விநியோகி வருகின்றன. (க) (நி) ளனர்.

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் 30ஆம் நாள் (15-11-1993) திங்கட்கிழமை காலை 9.18 மணிமுதல் 10.23 மணி வரையுள்ள சுப மங்கள வேளையில்,

காரை நகரைச் சேர்ந்த
திரு. திருமதி
அ அப்புத்துரை அவர்களின்
சிரேஷ்ட புதல்வன்
**குகதாசன்**
அவர்களுக்கும்

★

காரைநகரைச் சேர்ந்த,
கிளிநொச்சி, சாந்தி வைத்தியசாலை உரிமையாளர்
டாக்டர் கிருஷ்ணர் சுப்பையா
(கொத்மலை உடகெந்தனை பகுதிகளைச் சார்ந்த பெருந்தோட்டத்துறை முன்னாள் தலைமை வைத்திய அதிகாரி)
திருமதி
சிவபாக்கியம் சுப்பையா தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
**கலாமதி**
அவர்களுக்கும்

திருவருள் துணையோடு கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீ செல்வபாலவிநாயகர் தேவஸ்தானத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும், இராப்போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

இரு வீட்டாரின் அழைப்பு

திருமதி அ. அப்புத்துரை

டாக்டர் கி. சுப்பையா,
திருமதி சுப்பையா குடும்பம்.
சாந்தி வைத்தியசாலை, கிளிநொச்சி.

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும் (சி7775)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
### 1994 ஆம்ஆண்டிற்கான
## கேள்வி அறிவித்தல்

01-01-1994 தொடக்கம் 31-12-1994 வரையிலான காலப் பகுதிக்குள் கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களுக்கு கேள்விகள் இரு பிரதிகளில் 02-11-1993ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கேள்வி விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை வல்வெட்டித்துறை | 40040. 00 | 1000. 00 | 100. 00 |
| 2. மீன் சந்தை வல்வெட்டித்துறை | 34155. 00 | 1000. 00 | 100. 00 |
| 3. மாட்டிறைச்சிக்கடை வல்வெட்டித்துறை | 27775. 00 | 1000. 00 | 100. 00 |
| **சேவை** | | | |
| குப்பைகூழங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரப் பெட்டி வாடகைக்கு வழங்குதல். | | 250. 000 | 50. 00 |

மேற்படி வைப்புப் பணமும் கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 01-11-1993 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது. மேற்படி கட்டணங்கள் இவ் அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
15-10-93. (சி-7754)

ந. ஞானவேல்
செயலாளர்
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை

தரம் அல்லது அதற்கிணைந்த தகைமைகளுடன், சந்தைப்படுத்தல்/வழங்கல் பொருள் விநியோகம்/பொருட்களின் இறக்குமதி ஏற்றுமதி என்ற துறைகளில்ஒன்று அல்லது மேற்பட்டனவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அநுபவம்.

அல்லது:

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) / க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் சந்தைப்படுத்தல்/வழங்கல் பொருள் விநியோகம்/பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி என்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அநுபவம்.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை:- உரொக்கம் ரூ. 4,420/-
ஆதனம் ரூ. 15,000/-

விண்ணப்ப முடிவு திகதி:- 05 11-93

விண்ணப்பப் படிவத்தையும், ஏனைய மேலதிக விபங்களையும் ரூ. 10/- செலுத்தி சங்க வேலை நாட்களில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். (சி-7763)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு: 24-09-1974

வீரச்சாவு: 24-10-1992

## லெப்டினன்ட் நெருமாறன்

கிருஷ்ணபிள்ளை கிருபாகரன் (குமரேசு)

(மண்கிண்டி இராணுவமுகாம் காவலரண் தகர்ப்பில்)

பால் மணம் மாறாத பாலகன் நீ
பாவிகள் எமைப் பரிதவிக்கவிட்டு
பார்மீட்கப் புறப்பட்டனையோ
வழிமேல் விழிவைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
உன் இலட்சியம் நிறைவேறமுன்
மணலாற்று மண்ணில் வீரசொர்க்கம்
அடைந்தாயே.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினரும்
உறவினர்களும்.

புலோலி தெற்கு,
புலோலி.
24-10-93 (6363)

### போட்டி முடிவுகள்

சர்வதே வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ் விழிப்புலனற்றோர். சங்கம் நடாத்திய வினாவிடைப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரியை சேர்ந்த ப. பத்ம கீதா முதலாமிடத்தையும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியை சேர்ந்த ம. பிரபாகினி இரண்டாமிடத்தையும், முகமாலையைச் சேர்ந்த யே. ஜெயவதனி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். மற்றும் இருபது பேர் ஆறுதல் பரிசுகளையும் பெற்றுள்ளனர்.

### ஐக்கிய நாடுகள் தினம்

சாவகச்சேரி அரிமா கழகத்தின் ஆதரவில் ஐக்கி நாடுகள் தினம் நாளை திங்கட் கிழமை பிற்பகல் 2. 30 மணியளவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிமண்டபத்தில் லயன்டாக்டர் க. தா, சிவபாதம்தலைமையில்இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. புஷ்பா கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக மு. திருநாவுக்கரசுவும், கௌரவ விருந்தினராக க, அருந்தவபாலனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் நியமனம்

(கொழும்பு)


வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு 107 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இவர்கள் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் பணியாற்றுவர்

### அதிரடிப்படை ஒத்திகையில் ஒரு சிப்பாய் பலியானார்

(அம்பாறை)

அம்பாறை மல்வத்தை விசேட அதிரடிப்படை முகாமில் திடீரென நடத்தப்படும் தாக்குதலை எதிர் கொள்ளும் முகமாக நடந்த ஒத்திகை நடவடிக்கையில் துப்பாக்கி சூட்டில் விசேட அதிரடிப் படைபொலிஸ் ஒருவர் பலியானார். முகாமில் அவரது நேரத்திற்கான சைரன்ஒலிகள் கேட்க முகாமில் அவசர நிலைகளை சமாளிக்கும் வகையில் படையினர் உஷாராகினர். அப்போது வெளியே இருந்த ஒருவர் துப்பாக்கியுடன் முகாம் நோக்கி ஒடி வந்தார். அப்பொது காவலரணிலிருந்த மற்றொரு அதிரடிப்படை சிப்பாய் நடாத்திய சரமாரியான சூட்டில் திலகரட்ண என்ற


# இலவச பற்சிகிச்சை Free Dental Service



தமிழீழ மக்களின் நலன் கருதி
பின்வரும் தினங்களில் எமது
வைத்தியசாலையில்
இலவச பற்சிகிச்சை அளிக்கப்படும்

24- 10- 93 ) ஞாயிற்றுக்கிழமை காலை
31- 10- 93 )
07- 11- 93 ) -8.30 மணி முதல் நண்பகல்
14. 11. 93 ) 12.00 மணிவரை

## எமது ஏனைய சேவைகள்:-

(சலுகைக் கட்டண அடிப்படையில் *Concession Rate*)

- அனுபவம் நிறைந்த வைத்தியர்களின் 24 மணிநேர வெளி, உள் நோயாளர் சேவை [24HOURS SERVICE]
- சகல துறைகளிலும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை [SPECIALIST CONSULTATION]
- சத்திர சிகிச்சை வசதி [OPERATION THEATER FACILITY]
- மகப்பேறு கூட வசதி [MATERNITY SECTION]
- பற்சிகிச்சை வசதி [DENTAL SURGERY]
- ஆய்வுகூட பரிசோதனை வசதி [LABORATORY FACILITY]
- ஈ. சீ. ஜீ. வசதி [E. C. G]
- விசேட மருத்துவ விடுதிகள் [SPECIAL WARD]
- இரவு/பகல் மருந்தக சேவை (DAY & NIGHT PHARMACY)

"எம் கடன் பணி செய்வதே"

# வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை
# William Harvey Private Hospital

இல.17, கண்டிவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (6362) No.17, KANDY ROAD, CHUNDUKKULI, JAFFNA.

### அதிரடிப்படை ஒத்திகையில் ஒரு சிப்பாய் பலியானார்

(அம்பாறை)

அம்பாறை மல்வத்தை விசேட அதிரடிப்படை முகாமில் திடீரென நடத்தப்படும் தாக்குதலை எதிர் கொள்ளும் முகமாக நடந்த ஒத்திகை நடவடிக்கையில் துப்பாக்கி சூட்டில் விசேட அதிரடிப் படைபொலிஸ் ஒருவர் பலியானார். முகாமில் அவரது நேரத்திற்கான சைரன்ஒலிகள் கேட்க முகாமில் அவசர நிலைகளை சமாளிக்கும் வகையில் படையினர் உஷாராகினர். அப்போது வெளியே இருந்த ஒருவர் துப்பாக்கியுடன் முகாம் நோக்கி ஒடி வந்தார். அப்பொது காவலரணிலிருந்த மற்றொரு அதிரடிப்படை சிப்பாய் நடாத்திய சரமாரியான சூட்டில் திலகரட்ண என்ற அந்தஅதிரடிப் படைசிப்பாய் பலியானார்.


பற்சிகிச்சை வசதி [DENTAL SURGERY]

ஆய்வுகூட பரிசோதனை வசதி [LABORATORY FACILITY]

ஈ. சீ. ஜீ. வசதி [E. C. G]

விசேட மருத்துவ விடுதிகள் [SPECIAL WARD]

இரவு/பகல் மருந்தக சேவை (DAY & NIGHT PHARMACY)

"எம் கடன் பணி செய்வதே"

# வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை

# William Harvey Private Hospital

இல.17, கண்டிவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(6362)

No.17, KANDY ROAD, CHUNDUKKULI, JAFFNA.



# செஞ்சிலுவைச் சங்கக் கொடி வாரம் - 1993

ஒக்ரோபர் 25 - 31 வரை

"உங்களுக்கு உதவ எமக்கு உதவுங்கள்"

HUMANITY IS GREAT

"கடும் போர் நடக்கும் போது
கடு கதியில் அங்கு சென்று
அல்லலுறும் மக்களுக்கு உடனே
உதவி அளிப்பது செஞ்சிலுவைச்சங்க மன்றோ"

DIGNITY FOR ALL

LIGHT THE DARKNESS

வாரி வழங்குங்கள்

நம் மக்கள் நல் வாழ்வுக்காக

எமது தொண்டர் உங்களிடம் வருவர் - இயலுமானதை அளியுங்கள் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகள் யாழ். பிரதேச ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இயங்குகின்றன

இ:செ:சி.ச: யாழ் கிளையின் பிரிவுகள்:

நெடுந்தீவு, சங்கானை, உடுவில், சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய், நல்லூர், கோப்பாய், மருதங்கேணி, வேலணை, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம், கரவெட்டி, பளை [சிவிநொச்சிக் கிளை]

தலைமையகம்: 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7770)


# 6-ம் ஆண்டு நினைவலைகள்



செல்வி

**நல்லதம்பி மேகலா**

மலர்வு : 21-3-1966

உதிர்வு : 30-10-1987



**கப்டன் ரதீஸ்**

நல்லதம்பி முத்தழகு

மண்ணில் : 06-10 1969

மண்மீட்பில் : 24-10 1987

கள்ளிச்சை வடமுனையில் தம்பி ரதீஸ் களமாடி
சிங்கள படையினை சிதறடித்து
உயிர் நீத்த செய்தி கேட்டு
தலை மறைவாய் இருந்த அக்காள்
உடல் தரிசிக்க ஓடோடி வந்த போது
தேச துரோகிகளும் தென் இந்திய வானரும்
சுற்றி வளைத்திடவே துணிவோடு நஞ்சருந்தி
தம்பியுடன் சேர்ந்து கொண்டாய்
தமிழீழம் உள்ளவரை நீவீர் வாழ் வாங்கு
வாழ்வீர !

நாமும் வாழ்த்துகிறோம்.

விபுலானந்த வீதி
வாழைச்சேனை
மட்டக்களப்பு.

தற்போதைய முகவரி
179 5 பிறவுண் றோட்
யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா
மற்றும் எமது
வேங்கை மைந்தர்கள்.

(6351)

சிந்தனைக்கு

கல்விக்கு ஒரே ஒரு குறிக்கோள் தான் இருக்க முடியும். அது வீரம் ஊட்டுவதே.

- ஆல்ஃபிரெட் ஆட்லர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24 10- 1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த பெ. எண் - 05

## பேரினவாதத்தின் தலைவனாக......

சிங்களப் பேரினவாதிகளுக்கு தென்பும், உற்சாகமும் ஊட்டக் கூடிய தலைவர் தான் என்பதை ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா தெளிவாக நிருபித்து வருகின்றார். இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரேவழி எனக் கூறி பேரினவாதிகளின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்ற அவர், தற்பொழுது பல்கலைக்கழக அனுமதி மூலம் மீண்டும் ஒரு பாராட்டுதலைப் பெற்றுக் கொள்ளவும், தலைமைத்துவத்தை நிலை நாட்டவும் முற்பட்டுள்ளார்

றோயல் கல்லூரியில், நேற்று முன்தினம் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய டி. பி. விஜேதுங்கா, பல்கலைக்கழக அனுமதியில் மாற்றம் தேவை என்றும், அம்மாற்றம் திறமையின் அடிப்படையில் அமைந்த அதேவேளை, இன விகிதாசாரத்தைப் பேணக் கூடியதாக இருக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அதாவது, பல்கலைக்கழக அனுமதியில், முழுமையான இனவிகிதாசாரம் பேணப்படவேண்டும் என்பதே இவ் அறிவிப்பாகும்.

தற்பொழுது பல்கலைக்கழக அனுமதியில் திறமையின் அடிப்படையில் 55 வீத மாணவர்களும், மாவட்ட அடிப்படையில் - இன விகிதாசாரத்திற்கான வழிமுறையே- 40 சதவீதமானவர்களும், 5 வீதமானோர், பின்தங்கிய மாவட்டங்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர். இன்றைய இந்நிலையானது. 1972ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறையில் இருந்து சற்று முன்னேற்றகரமானதாக இருப்பினும், தமிழ் மாணவர்கள் திறமையின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழக அனுமதியில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், தற்பொழுது டி பி. விஜேதுங்கா தெரிவித்துள்ள யோசனை குறித்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நோக்கும்போது இந்நிலையானது மீண்டும் 1972ஆம் ஆண்டு தரப்படுத்தலையும் விட மோசமானதாக அமையும் என்றே எண்ணவைக்கின்றது. ஏனெனில், அவரின் யோசனையின்படி திறமையின் அடிப்படையில் தெரிவு எனினும், அதில் இனவிகிதாசாரம் பேணப்படும் போது தமிழரின் பல்கலைக்கழக அனுமதியில் மீண்டுமொரு பெரும் வீழ்ச்சி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

## வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்களவர்களுக்குஉரிமைவேண்டும்

### மாத்தறை மாவட்ட எம்.பி.கோரிக்கை

(மாத்தறை)

சிறிலங்காவின் கடல்வலயத்தில் பெரும்பகுதி பிரபாகரன் வசமாகி விட்டது என மாத்தறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம் பி. மகிந்த விஜய சேகர தெரிவித்தார்.

அண்மையில் ஹபரதுவ பகுதியில் நடைபெற்ற கடற்தொழிலாளர் சங்க கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிங்கள மக்கள் இன்று அனாதைகளாகி விட்டனர். தமிழர்களால் இன்று சிறிலங்காவின் சகல பகுதிகளிலும் வாழமுடிகிறது. ஆனால் சிங்கள மக்களுக்கோ வடக்கு. கிழக்கு தடைவலயமாக இருக்கிறது. கடலிலும் பெரும்பகுதி இன்று விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் வசமாகி விட்டது.

இலங்கையில் பிறந்த சிங்களவர்களுக்கு வடக்கு, கிழக்கிலும் சகல உரிமைகளும் வழங்கபடல் வேண்டும் என்றார்.

பலநூற்றாண்டு காலமாக வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின்கீழ் அடிமைப்பட்டுஇருந்த இந்தநாடு 1948இல்சுதந்திரம் பெற்றது சுதந்திரம் பெற்று அரைநூற்றாண்டை கடந்து விட்டபோதிலும் இந்தநாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை அடிப்படை மனித உரிமைகள் கூட இன்று எமது மக்களுக்கு இல்லாது போய்விட்டது.

எம்மைச் சுற்றியுள்ள கடல் பிரதேசங்களை வெளிநாட்டார் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

## கைத்துப்பாக்கியைதிருடினாராம் கான்ஸ்டபிள் தேடப்படுகிறார்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரி ஒருவரின் கைத்துப்பாக்கியைத் திருடியதாக சந்தேகிக்கப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சிறிலங்கா பொலிசார் சுற்றிவளைத்து கைது செய்ய முற்பட்டபோது அவர் தப்பி ஓடியதாக கூறப்படும் சம்பவம் ஒன்று அகழத்த கொடையில் நடைபெற்றது.

விசேட பொலிஸ் கோஷ்டி ஒன்று பொலிஸ் கான்ஸ்டபிளை கைது செய்யும் நோக்குடன் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## அதிகாரியின் தாக்குதலால் சிப்பாயின் கழுத்து முறிந்தது

திருக்கோணமலை கடற்படைத்தளத்தில் கடற்படை சிப்பாயான தமிழர் ஒருவரை சிங்கள கடற்படை கப்டன் தாக்கியுள்ளார். இந்த தாக்குதலினால் அச்சிப்பாயின் கழுத்து எலும்பு முறிந்தது. தனராஜ் என்ற கடற்படை சிப்பாயே தாக்கப்பட்டவராவார்.

## உளவுபார்த்ததாக கைதுசெய்யப்பட்ட 29 சிங்கள மீனவர் இந்தியாவினால் விடுதலை

(கொழும்பு)

இந்திய கடற்படையினால் கைது செய்யப்பட்ட 29 சிங்கள மீனவர்களை இந்தியா விடுதலை செய்துள்ளது. அண்மையில் புதுடில்லியில் வைத்து வெளியுறவு செயலாளர் பெர்னாட் திலகரட்ன இந்திய அதிகாரிகளை கேட்டுக்கொண்டதையடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

லட்சதீவுக்கு அருகில் கடந்த மாதம் கைதான இந்த 29சிங்கள மீனவர்களும் உளவு பார்த்ததாகவும் இவர்களிடம் நவீனரக கருவிகள் பொருத்தப்பட்ட படகுகள் இருந்ததாகவும் இந்தியா இதுவரை குற்றஞ்சாட்டி அம் மீனவர்களை தடுத்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலமைச்சர் பணிப்பு

(காலி)

மாகாண சபைத் தேர்தல்களின் பின் மே மாதம் 17 ம் திகதிக்குப் பின் இடம் பெற்ற அரசியல் இடமாற்றங்களும் நியமனங் களும் ரத்துச் செய்யப்படும் என தென் மாகாண முதலமைச்சர் அறிவித்துள்ளார்

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை அவர் சம்பந்தப்பட்ட சகலஅதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக தென்மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## மலையக தமிழர் கைது ஜனாதிபதிக்கு தொண்டா கடிதம்

(கொழும்பு)

கொழும்பில் மலையக தமிழர் வகை தொகையின்றி கைதாவது குறித்து அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இது ... திபதியை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

கைதுகள் குறித்து நான் ஏற்கனவே இரு தடவை தொடர்பு கொண்டபோது இதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கவனித்துக்கொள் ... அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன் இத்தகைய ஒரு சூழலில் இப்பிரச்சினை தொடர்பாக விவரமாக நான் பேச பாதுகாப்பு அமைச்சின் செயலர், பொலிஸ்மா அதிபர் அடியோர் கலந்துகொள்ளும் ...

## தொண்டமனாறு பகுதியில் கடற்படை பீரங்கி தாக்கு

(வடமராட்சி)

தொண்டமனாறு கடற்பரப்பில் ரோந்துசென்ற சிறிலங்கா விசைப்படகிலிருந்து அப்பகுதி குடியிருப்புக்கள் மீது கடற்படையினர் வெள்ளி காலை 7-45 மணியளவில் தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டனர்.

தொண்டமனாறு குடியிருப்புக்கள் மீது கடற்படையினர் பதினைந்து நிமிடங்கள் இடைவிடாது பீரங்கி, ஷெல் ஆகியவற்றின் மூலம் தாக்கினர். தொண்டமனாறு தொடக்கம் வல்வெட்டித்துறை வரையில் இத்தாக்குதல் சம்பவம் நீடித்தது.

குடியிருப்புக்கள் மீது ஏவப்பட்ட ஷெல்கள், குண்டுகள் மரங்கள் மீதும், வெளியிடங்களிலும்பட்டு வெடித்துச் சிதறின. பாரிய சேதங்கள் ஏற்பட்டதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இச்சம்பவத்தையடுத்து தொண்டமனாறு வீரகத்தி பாடசாலை மாணவர்கள் வரவும் குறைந்திருந்தது.

குடியிருப்புக்கள் மீது கடற்படையினர் தாக்குதலைதொடுத்தபோது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். இதனையடுத்து கடற்படைப்படகு ஓடி மறைந்தது.

(யோ)

## யாழ்தேவி நடவடிக்கை பற்றி ராவய புகைப்படத்தால் ராணுவம் பெரும் அதிர்ச்சி

(கொழும்பு)

தோல்வியில் முடிவடைந்த யாழ் தேவி இராணுவ நடவடிக்கையின் போதுசிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புக்களை புகைப்படம் பிடித்து கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது குறித்து இராணுவ வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியிருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்து வெளியாகும் ராவய என்ற சிங்கள வார இதழ் தனது கடந்த வார பத்திரிகையில் யாழ் தேவி நடவடிக்கையின் போது இராணுவத்தினரின் இரு டாங்கிகள் இருகவச வாகனங்களை கைப்பற்றி தாக்கி அழித்த போது பிடிக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிட்டது தெரிந்ததே.

மேற்படி பத்திரிகை தனது கடந்த வார வெளியீட்டில் மூன்று பக்கங்களில் 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ தரப்பினருக்கு ஏற்பட்ட பாரிய உயிர் இழப்புக்களையும் ஆயுத தளபாட இழப்புக்களையும் கைபபற்றிய ஆயுதங்களையும் புகைப்படங்களாக வெளியிட்டதுடன் கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தது,

மேற்படி தாக்குதல் தமக்கு பூரண வெற்றியை அளித்ததாக சிறிலங்கா அரசு தமது தொடர்பு சாதனங்களூடாக சிங்கள மக்களுக்கும் வெளியுலகிற்கும் பொய்ப்பிரசாரங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மேற்படி பத்திரிகை இவ்வாறு முரண்பட்ட செய்தியை வெளியிட்டுள்ளமையானது சிறிலங்கா அரசினதும் படையினரதும் முகத்திரையைக் கிழித்தெறிந்துள்ளது என அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மலசலகூடம் அமைக்க மாநகரசபை உதவி

நாவாந்துறைப் பகுதியிலுள்ள மலசலகூட வசதியற்ற குடும்பங்கள் வாழும் வீடுகளுக்கு மலசலகூட வசதி செய்து கொடுப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் முதற்கட்டமாக சென். மேரிஸ் சன சமூக நிலையத்தின் உதவியுடன் பதினைந்து வீடுகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு மலசலகூடம் அமைப்பதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன

## வேலை நிறுத்தம் செய்ய புகையிரத ஊழியர் முடிவு

புகையிரத திணைக்களத் தொழிலாளர்களால் நாடளாவிய வேலை நிறுத்தத்திற்கு ... யாகும் முறையான நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து, சகல தொழிற் சங்கத் ...

யில், முழுமையான இனவிகிதாசாரம் பேணப்படவேண்டும் என்பதே இவ் அறிவிப்பாகும்.

தற்பொழுது பல்கலைக்கழக அனுமதியில் திறமையின் அடிப்படையில் 55 வீத மாணவர்களும், மாவட்ட அடிப்படையில் - இன விகிதாசாரத்திற்கான வழிமுறையே- 40 சதவீதமானவர்களும், 5 வீதமானோர், பின்தங்கிய மாவட்டங்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர். இன்றைய இந்நிலையானது. 1972ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறையில் இருந்து சற்று முன்னேற்றகரமானதாக இருப்பினும், தமிழ் மாணவர்கள் திறமையின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழக அனுமதியில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், தற்பொழுது டி பி. விஜேதுங்கா தெரிவித்துள்ள யோசனை குறித்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நோக்கும்போது இந்நிலையானது மீண்டும் 1972ஆம் ஆண்டு தரப்படுத்தலையும் விட மோசமானதாக அமையும் என்றே எண்ணவைக்கின்றது. ஏனெனில், அவரின் யோசனையின்படி திறமையின் அடிப்படையில் தெரிவு எனினும், அதில் இனவிகிதாசாரம் பேணப்படும் போது தமிழரின் பல்கலைக்கழக அனுமதியில் மீண்டுமொரு பெரும் வீழ்ச்சி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதி மூலம் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்துவரும் சிங்கள அரசாங்கம் இறுதியாக 1991 / 92 ஆம் கல்வி ஆண்டிலும் பெரும் வெட்டை ஏற்படுத்தியுள்ளது. யாழ். பல்கலைக்கழக அனுமதியில் 50 வீதத்திற்கும் அதிகமான வெட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது இவ்வெட்டானது, ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த 15 வருட காலத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய வெட்டாகும். அதிலும், இவ்வெட்டானது, டி பி. விஜேதுங்கா தலைமையின் போதே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில், மீண்டும் ஒரு புதிய முறையைக் கொண்டுவந்து பல்கலைக்கழக அனுமதியில் மீண்டும் ஒரு வெட்டை ஏற்படுத்த முனைவது, ஜனாதிபதியின் இனவாத சிந்தனையின் வெளிப்பாடே ஆகும். 1972 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத் தரப்படுத்தல், இலங்கையின் அரசியலில் ஏற்படுத்திய பெரும் நெருக்கடி இன்னமும் தீர்க்கப்படாத நிலையில், மீண்டும் தமிழ் மாணவர்கள் அனுமதியில் பெரும் வெட்டை ஏற்படுத்தும் டி.பி. விஜேதுங்காவின் திட்டம் எரியும்நெருப்பில் எண்ணெய் வார்க்கும் நடவடிக்கை ஆகும்.

இதேவேளை, டி. பி. விஜேதுங்காவின் திறமையின் அடிப்படையில் தெரிவு என்பது உண்மையில் சிங்கள உயர் குழாத்தினருக்கான சலுகை அறிவிப்புமாகும் தற்பொழுது அமுலிலுள்ள அனுமதி முறையின் படி 40 வீதமானோர், மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்நிலையானது மாற்றப்படும் பட்சத்தில், நகர்களில் உள்ள முன்னணி பாடசாலைகளில் இருந்தே பல்கலைக்கழகத்தை மாணவர்கள் நிரப்புவார்கள். கிராமப் புறப்பகுதி பெருமளவு ஒதுக்கப்பட்ட நிலையையே அடையும்.

இந்நடவடிக்கையானது, சிங்கள உயர் குழாத்தின் அபிலாசைகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பிரதிபலிக்க முற்படுவதையே காட்டுவதாக உள்ளது ஆனால், இதன் விளைவு தமிழர்கள் தரப்பில் மட்டுமிருந்தல்ல. சிங்கள இளைஞர் தரப்பிலும் பெரும் நெருக்கடியை உருவாக்கக் கூடும் சிங்கள இளைஞர்கள் கல்வி வாய்ப்பின்மை, வேலைவாய்ப்பின்மை என்பவற்றால், ஏற்கனவே இரு தடவை கிளர்ச்சி செய்தமையும், அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர் கொல்லப்பட்டதும் மறந்து போன விடயங்கள்அல்ல.

ஆனால், இவையாவற்றையும் தெரிந்து கொண்டும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மீண்டும் ஒரு தடவை பல்கலைக்கழக அனுமதியில் சீர்திருத்தம் செய்யமுற்படுவது என்பது, அவரின் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கையின்முன்முயற்சியே ஆகும். இதுசிலவேளை அவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுத்தரலாம். ஆனால், சிறிலங்கா அரசுடன் இலங்கைத் 'தமிழ் மக்களுக்'கு இருந்து வரும் நூலிழையான உறவும் அறுந்து போவதற்கே வாய்ப்பை ஏற்படுத்தும்.

(கொழும்பு)

இந்திய கடற்படையினால் கைது செய்யப்பட்ட 29 சிங்கள மீனவர்களை இந்தியா விடுதலை செய்துள்ளது. அண்மையில் புதுடில்லியில் வைத்து வெளியுறவு செயலாளர் பெர்னாட் திலகரட்ன இந்திய அதிகாரிகளை கேட்டுக்கொண்டதையடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

லட்சதீவுக்கு அருகில் கடந்த மாதம் கைதான இந்த 29சிங்கள மீனவர்களும் உளவு பார்த்ததாகவும் இவர்களிடம் நவீனரக கருவிகள் பொருத்தப்பட்ட படகுகள் இருந்ததாகவும் இந்தியா இதுவரை குற்றஞ்சாட்டி அம் மீனவர்களை தடுத்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர் அறிவித்துள்ளார்

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை அவர் சம்பந்தப்பட்ட சகலஅதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளதாக தென்மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

# மலையக தமிழர் கைது ஜனாதிபதிக்கு தொண்டா கடிதம்

(கொழும்பு)

கொழும்பில் மலையக தமிழர் வகை தொகையின்றி கைதாவது குறித்து அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொள்ளும் வகையில் ஒரு சந்திப்பை ஏற்படுத்துமாறும் அவர் ஜனாதிபதியை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

கைதுகள் குறித்து நான் ஏற்கனவே இரு தடவை தொடர்பு கொண்டபோது இதை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கவனித்துக்கொள்வார் என நீங்கள் என்னிடம் உறுதியளித்தீர்கள். தற்போது மீண்டும் கைதுகள் தொடருகின்றனபொலிஸ்நிலையத்தில் ஒரு அறையில் 200 பேர் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன் இத்தகைய ஒரு சூழலில் இப்பிரச்சினை தொடர்பாக விபரமாக நான் பேச பாதுகாப்பு அமைச்சின் செயலர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்துகொள்ளும் வகையில் ஓர் சந்திப்பை விரைவில் கூட்டுமாறு வேண்டுகின்றேன். இதற்கு முடிவு காண்பது அவசியமாகவுள்ளது.

## யெல்ட்சின் ஆணை பிறப்பிப்பு

(மாஸ்கோ)

மாஸ்கோ செயின்ட்பீட்டர்ஸ்பர்க்உட்படமற்றும்பலபிராந்தியங்களின் மாகாண பாராளுமன்றங்களுக்கான தேர்தல்கள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பாக நடத்தப்பட வேண்டுமென ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் ஆணை பிறப்பித்துள்ளார்.

## இந்திய மீனவர் பாதுகாப்பிற்காக கடற்படை ரோந்து அதிகரிக்கவும்

### வாழப்பாடி வேண்டுகோள்

(சென்னை)

இந்தியக் கடற்பகுதியில், மீன் பிடிக்கும் இந்தியமீனவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் வகையில் இந்திய கடலோர காவல்படையின் ரோந்துப் பணியை அதிகரிக்கும்படி தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் பிரதமர் பி. வி. நரசிம்மராவை சந்தித்த அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். மேலும் இந்திய மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமான வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதாகவும், கடந்த மூன்று மாதங்களில் மட்டும் சுமார் பத்துக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் உயிரிழந்ததுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கச்சதீவு விடயம் குறித்து இலங்கை அரசுடன், இந்திய அரசு உயர்மட்டப் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

## தமிழக மாநில அரசினால் ஆளுநர் அவமானப் படுத்தப்படுகிறார்

### நல்லாட்சி இயக்கம் புகார்

(சென்னை]

தமிழகத்தில் ஆளுநர்மாநில அரசினால் அவமானப் படுத்தப்படுவதாக தமிழக நல்லாட்சி இயக்கத்தை சேர்ந்த முன்னாள் அமைச்சர்களான க. இராசாராம் மற்றும் வி. வீ. சுவாமிநாதன் ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்துடன், தமிழகத்தில் கொள்ளை போன்ற சமூக விரோதச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## அமைதி ஊர்வலத்திற்கு பஞ்சாப் அரசு தடை விதிப்பு

(டில்லி)

அகாலிதள் குழுக்கள் சில அடுத்த முதல் திகதியன்று அமர்தசரஸ் நகரிலிருந்து டில்லிக்கு நடத்த உத்தேசித்திருந்த அமைதி ஊர்வலத்திற்கு தடை விதிப்பதென பஞ்சாப் அரசு தீர்மானித்துள்ளது,

பஞ்சாப் மாநில முதல்வர் பியாந்சிங் சண்டிகரில் நிருபர்கள் மத்தியில் பேசும்போது மேலும் கூறுகையில், அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வதற்காக பொது மக்களின் சமய உணர்வுகளைத் தட்டிவிட்டு தூண்டிவிடுவதே இந்த ஊர்வலத்தின் நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

இதனிடையே, குரு சரண் சிங் றோரா, பிரகாஷ் சிங் பாதல், எஸ். எஸ். பர்னாலா, ஜத்தேவ்சிங், தல்வண்டி ஆகியோர் உட்பட சுமார் இருபது சீக்கிய தலைவர்கள் அமைதிக்கு ஊறு விளைவிக்கக் கூடும் என்ற அச்சத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## விசேட கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைக் கிளையின் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 26ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-15 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் சங்க உப-தலைவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## அடையாள அட்டை

மாங்குளம் விலாசமிடப்பட்ட கதிரிப்பிள்ளை ஞானப்பிரகாசம் என்பவரது அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாதம்' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம். (யோ)

அழித்த போது பிடிக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிட்டது தெரிந்ததே.

மேற்படி பத்திரிகை தனது கடந்த வார வெளியீட்டில் ... சிறிலங்கா அரசினதும் படையினரதும் முகத்திரையைக் கிழித்தெறிந்துள்ளது என அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மலசலகூடம் அமைக்க மாநகரசபை உதவி

நாவாந்துறைப் பகுதியிலுள்ள மலசலகூட வசதியற்ற குடும்பங்கள் வாழும் வீடுகளுக்கு மலசலகூட வசதி செய்து கொடுப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் முதற்கட்டமாக சென். மேரிஸ் சனசமூக நிலையத்தின் உதவியுடன் பதினைந்து வீடுகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதோடு மலசலகூடம் அமைப்பதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன

## வேலை நிறுத்தம் செய்ய புகையிரத ஊழியர் முடிவு

புகையிரத திணைக்களத் தொழிலாளர்களால் நாடளாவிய வேலை நிறுத்தத்திற்கு இட்டமிடப்பட்டுள்ளது

ரயில்வே திணைக்களத்தை ரயில்வே அதிகார சபையாக மாற்றியமைக்க பாராளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடாத்தி தங்கள் எதிர்ப்புக் கண்டனத்தை தெரிவிப்பார்கள் என தொழிற் சங்க இணைப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது ஆரம்ப நடவடிக்கையாகும் முறையான நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து, சகல தொழிற் சங்கத்துறைகளினதும் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

37 தொழிற் சங்கங்களின் 450 பிரதிநிதிகள் அடங்கிய நடைமுறைக் குழுவினால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது

## விசேட பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன சேமிப்புச் சங்க விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு சங்கத் தலைவர் திரு. ச. விசுவநாதன் தலைமையில் மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறும். (யோ)

## வீட்டுத்தோட்டப் போட்டி

(கொழும்புத்துறை)

யுனிசெப் உதவியுடன் யாழ் மாநகராட்சி மன்றத்தால் வீட்டுத்தோட்டப்போட்டி வழமை போல் இவ்வருடமும் நடாத்தப்படவுள்ளது.

நகர்ப்புற அடிப்படைச்சேவைத்திட்டத்தின் கீழ்நடாத்தப்படவுள்ள இப்போட்டியில் யாழ் மாநகராட்சி மன்றப் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் சகலரும் பங்குபற்றலாம்.

சில விதை வகைகள் இலவசமாக யாழ் செயலகத்துக்கு அருகாமையில் உள்ள யாழ் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வழங்கப்படுகிறது.

அவ்வப்பகுதிக் குடும்ப நல சேவையாளர்களிடமும் இவ் விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## சோளச் பயிர்ச்செய்கை

1993/94 காலபோகங்களுக்குரிய சோளப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக 1/8 ஏக்கர் விஸ்தீரணத்திற்குக் குறையாமல் சோளப்பயிரினை தனிப் பயிராக செய்கை பண்ணுவோருக்கு வரட்சி நிலவும் காலத்தில் நீர்ப்பாசனம் செய்வதற்கு ஏதுவாக மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு சோளப் பயிர்ச்செய்கைக்கான விதைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் தங்கள் பகுதி வட்டத் தொடர்பாளர் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## சந்திப்பு

தனியார் கல்வி நிலையம் தொடர்பான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 27ஆம்திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.

## 'துர்க்கா' சஞ்சிகை வெளியீடு

''துர்க்கா'' சஞ்சிகை இன்று வெளிவர இருக்கின்றது. இச் சஞ்சிகையில் இந்து கலைஇலக்கியம் சம்பந்தமான பல விடயங்கள் இடம்பெறும்.

ஈழநாதம்

# காஷ்மீரில் ஊர்வலம்மீது சூடு
# 37 பொதுமக்கள் பலி; பலர் காயம்

(டில்லி)

காஷ்மீரில் ஹசரத்பந் மசூதியை இந்திய இராணுவம் முற்றுகையிட்டிருப்பதை முறியடிக்க பெருந்தொகை முஸ்லிம்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக வந்தபோது இந்திய எல்லைக்காவல் படை நேற்று முன்தினம் நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் 37 பேர் பலியாகினர் பலர் காயமடைந்தனர்.

இதனைத்தொடர்ந்து மசூதி மீதான முற்றுகையை இந்திய இராணுவம் தீவிரமாக்கியுள்ளது. ஆர்ப்பாட்ட நடவடிக்கை தோல்வியடைந்ததை தொடர்ந்து நேற்று அங்கு அமைதி நிலவியது. மசூதியினுள் ஆயுதங்களுடன் காஷ்மீர் தீவிரவாதிகள் இருப்பதாக அவ்வளாகத்தை சுற்றி இந்திய இராணுவம் கடந்த எட்டு நாட்களாக முற்றுகையிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இராணுவ முற்றுகை நீடிக்கும்வரை பொதுமக்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் காஷ்மீரில் தொடரும் என காஷ்மீர் போராளிகள் கூட்டுக்குழு தெரிவித்துள்ளது.

## மயங்கி வீழ்ந்து மரணம்

குருநகர் மீன் சந்தைப்படுத்தும் பகுதியில் நேற்றுக் காலை வியாபாரத்தில் ஈடுபட்டுநின்றவர் மயங்கி வீழ்ந்து மரணமானாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

மயங்கியவர் தலை அடிபட வீழ்ந்ததை அடுத்து உடனடியாக தனியார் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டாராயினும் அவர் தப்பவில்லை.

இவ்வாறு மரணத்தைத் தழுவிக்கொண்டவர் குருநகரைச் சேர்ந்த வஸ்தியாம்பிள்ளை இராசநாயகம்(வயது 67) என்பவரெனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## வியாங்கொடைப் பகுதியில் ஜே.வி.பி.உறுப்பினர் கைது

(கொழும்பு)

வியாங்கொடை பொலிசார் குற்ற ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது மூவரைக் கைது செய்தனர் எனவும் இவர்களில் ஒருவர் ஜே வி.பி உறுப்பினர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

மற்றைய இருவரும் இத்தாலியில் உற்பத்தி செய்யப்பட்ட இரு சுழல் துப்பாக்கிகளை வைத்திருந்தனர் எனவும் வியாங்கொட பகுதியில் இவர்கள் பாரிய குற்றநடவடிக்கையில் ஈடுபட தயாராக இருந்தனர் என்றும் விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

## பிரதமர் தமிழகம் வருகை

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஒருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு நாளை தமிழகம்வரவுள்ளார். தமிழ்நாட்டில் இருதய அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் கே. ஆர். நாராயணனை நேரில்சந்தித்து சுகம்விசாரிப்பதற்காகவே பிரதமர் நரசிம்மராவ் தமிழகத்திற்கு வர இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலுதவி பெட்டி பொருத்த செஞ்சிலுவை ஏற்பாடு

பருத்தித்துறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யுத்த கால நடவடிக்கையின் போது பாதிப்படையும் பொதுமக்களின் உடன் வசதிகருதி சில இடங்களில் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கைதூக்கும் கட்டிலும் முதலுதவிப் பெட்டிகளும் பொருத்தவுள்ளன.

உயிர்காப்புப் பிரிவினரால் வல்வெட்டித்துறை ஊரிக்காடு தொண்டமனாறு, கெருடாவில், உடுப்பிட்டி. வல்லை போன்ற இடங்களில் உள்ள கேந்திர நிலையங்கள், கோயில்கள், பொது நிலையங்கள் ஆகிய இடங்களில் கைதூக்கும் கட்டிலும் முதலுதவிப் பெட்டிகளும் பொருத்தப்பட இருப்பதாக தொண்டர் பொறுப்பாளர் திரு. சூ. தவராசா தெரிவித்தார்.

மற்றும் இயமாதம் வல்வெட்டித்துறை, நாகர்கோயில், தொண்டமனாறு பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளால் இறந்த' காயமடைந்த குடும்பத்தினருக்கு இச்சங்கம் ஆறு மாதகால உலர் உணவு நிவாரணமாக வழங்கி வருகிறது. (யோ)

## புருண்டியில் இராணுவ ஆட்சி

மத்திய ஆபிரிக்க நாடான புருண்டியில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியுள்ளது. இந்நாட்டின் சிறுபான்மை பழங்குடி இனத்தைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் புருண்டி அரசை கவிழ்த்து அந்நாட்டின் ஜனாதிபதியையும் கொலை செய்துள்ளனர்.

கொல்லப்பட்ட ஜனாதிபதி அயல்நாடான ருவாண்டாவிற்கு அரசமுறைப் பயணம் சென்றபோது புருண்டியில் இராணுவ புரட்சி ஏற்பட்டு இராணுவ ஆட்சி உருவானது. இதனையடுத்து சுமார் ஒரு லட்சம் மக்கள் அகதிகளாக புருண்டியிலிருந்து வெளியேறி ருவாண்டாவந்து சேர்ந்துள்ளனர்.

## நிவாரணம் நிறுத்தத்தினால் மீனவர் பெரும் சிரமம்

(வடமராட்சி)

வடமராட்சி மீனவர்களுக்கான மீனவ நிவாரணம் கடந்த பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன ஆரம்பத்தில் இந் நிவாரணம் சில தடவைகள் வழங்கப்பட்ட போதிலும் குறிப்பாக ஏழு மாதங்களாக இந் நிவாரணம் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்டோர் தெரிவித்தனர்.

சிறிலங்கா அரசினால் கடல் வலயச்சட்டம் அறிமுகப்படுத்தியதையடுத்து கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக மீனவரது சுயதொழில் பாதிப்படைந்து வருகின்றது இக்கடற்பரப்பில் கடற்படையினரின் ரோந்துகள் தற்போதுமேலும் அதிகரித்துள்ளன கடற்படையினரின் இந் நடவடிக்கையினால் வடமராட்சிப்பகுதி மீனவர்கள் தினமும் தமது தொழில் வாய்ப்பை இழந்து வருவதோடு வருமானத்தையும் இழந்துள்ளனர்.

தற்போதைய நிலையில் மீனவர்கள் தொழிலுமின்றி நிவாரணமுமின்றிய நிலையில் இவர்களது குடும்பங்கள் துயரமடைந்து வருவதாகவும், இந் நிவாரணத்தை விரைவில் வழங்க அதிகாரிகள் பெரும் முயற்சிகள் எடுக்க வேண்டுமென்றும் பரிதாப நிலையில் வாடும் இவர்கள் மேலும் தெரிவித்தனர். [யோ]

இனவிகிதாசாரப்...

...லைக் கழகத்திற்கு பிரவேசிக்கும் மாணவர் ஒருவர் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாக மாட்டார் ஆயினும் கூட சில வருடங்களுக்கு அத்தகைய மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்ந்தும் அப்படியே இருக்க வேண்டும். கல்வி அடிப்படையில் வசதி குறைந்த மாவட்டங்களுக்காக ஒதுக்கப்படும் இடங்கள் குறிப்பிட்ட பாடநெறிக்காக மொத்த அனுமதித் தொகையிலிருந்து கழிக்கப்பட்ட பின்னர் மிகுதியாக இருப்பவை சிறப்பு தகைமையின் அடிப்படையிலும் இனவிகிதாசார அடிப்படையிலும் வழங்கப்படவேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது அரசாங்க சேவைக்கு தகுதி அடிப்படையிலும் இனவிகிதாசார அடிப்படையிலும் ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் க. பொ. த (சா|த) பரீட்சையிலும், க பொ. த. (உ|த) பரீட்சையிலும் மாணவர்கள் உயர்ந்த பெறுபேறுகளை பெறுவதற்கு காரணமாக இருக்கும் ஆசிரியர்களுக்குஅவர்களின் அயராத உழைப்பிற்காக தேசியவிருது வழங்கப்பட வேண்டும். இதற்கான திட்டமொன்று வரையப்படுவதும் அவசியமானதாகும் என்றும் குறிப்பிட்டார்.

## யாழ். பல்கலைக்கழகத்திற்கு பொருள் தருவிப்பதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்குக் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்துவருவதில் தொடர்ந்தும் பல சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான சிரமங்களை நீக்கி பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பொருள்களை தருவிப்பதற்காக இப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி உட்பட மூன்று உத்தியோகத்தர்கள் கொழும்பு சென்று நீண்ட காலமாகிவிட்டது ஆனால் இப்பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பொருள்களும் இங்கு தருவிக்கப்படவில்லை. கொழும்பு சென்ற உத்தியோகத்தர்களும் திரும்பவில்லை.

பல்கலைக்கழகத்தின் தேவைக்காக யாழ்ப்பாணம் எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவிடமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும் நிரந்தர அனுமதிபெறப்பட்ட பொருள்களின் பட்டியல் மேற்படி உத்தியோகத்தர்களின் கைவசம் இருக்கிறது ஆனால் அவ்வாறான பொருள்கள்கூட இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை. வேறுசில பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்பு களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலமையிலும் பொருள்கள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [க] (நி)

## கால்நடைச் சந்தை வடமராட்சியில் திறப்பு

(வடமராட்சி)

புலோலி மிருக வைத்தியர் பணிமனையில் நேற்று காலை 9 00 மணியளவில் கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி வடமராட்சிக்கான கால்நடைச் சந்தை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இச்சந்தை திரு. தணிகாசலம் தலைமையில் வடமராட்சி தெற்கு பிரதேச செயலர் திரு. செ ஸ்ரீனிவாசன் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் திரு.வே. பூங்குன்றன் ஏற்றி வைத்தார்

தொடர்ந்து யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. சுவாமிநாதன், வடமராட்சி வடக்கு தெற்கு பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன், வடமராட்சி பொருண்மிய மேம்பாட்டுக்கழக இணைப்பாளர் திரு. வே பூங்குன்றன், கோப்பாய் மிருகவைத்திய அதிகாரி திருமதி தங்கராசா, ஓய்வு பெற்ற பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு பொ. பாலசிங்கம் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர் இப் பணிமனை வளவில் மரங்களும் நாட்டி வைக்கப்பட்டன.

களுத்துறை

அரசின் நோக்கமாகும் எனத் தெரியவருகிறது

இவர்களைச் சென்று பார்வையிடுவதற்கு செஞ்சிலுவைக் குழுவிற்கு மாதம் ஒன்றிற்கு இரு தடவைகள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

ராவய

ஒருநாள் முழுவதும் தங்கியிருந்தோம்.

மறுநாள் அடம்பன் பகுதி முழுவதையும் சென்று பார்த்தோம் அது இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட பகுதியாகும். அங்கிருந்த இராணுவத்தினர் அப்பகுதியை விட்டு மன்னாருக்குச் சென்றிருந்தனர். மன்னார்மாவட்டத்தின் தலைமைச் செயலகமாக இருந்தபெரியபண்டிவிரிச்சான் முகாமில் வைத்து நாம் விசாரணைக்குட்படுத்தப்பட்டோம். அதன்போது நாம் வடபகுதியில் என்ன நடைபெறுகிறது என்பதை அவதானிக்கவேண்டும். இதற்காக நாம் யாழ்ப்பாணம்செல்லவேண்டும்என்று கூறினோம. அத்துடன் எங்க...

...னக் குண்டு வீச்சு நடத்தப்பட்ட இடத்திற்கும் சென்றோம், பாரியகிணறு தோண்டப்பட்டதுபோனறுகுழிஒன்று காட்சியளித்தது, இவை விமானப்படைக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் விமானங்களினால் போடப்பட்டது.

இந் நினைவுக் கூட்டத்தில் நடந்த குண்டு வீச்சினால் 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 74பேர்படுகாயம் அடைந்தனர், அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவு இடங்களைப் பார்க்கச் சென்றோம் விசேடமாக கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் 700 - 800 தூபிகள் காணப்பட்டன

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன்...

...ர்தி ஒன்றும் கடற்பிரதேசத்தில் தாக்குதல் நடத்தியது. இவர்கள் இலக்காக எதையும் கொண்டதாக தெரியவில்லை.

குண்டு வீச்சு நடை பெற்றுக் கொண்டிருந்தபோது பொது மக்கள் கலவரமடையாமல் குண்டு வீச்சிலிருந்து தம்மை பாதுகாக்கும் நடவடிக்கையில்...

ஒலிபரப்பாகவுள்ளது

கடந்த ஒரு வருடமாக யாழ்ப்பாணம் செல்வதற்கு தமக்கு அனுமதி வழங்கும்படி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தபோதிலும்எமக்குஅரசு அனுமதி வழங்கப்படவில்லை இதனால் எமது யாழ்ப்பாண விஜயம் இறுதி நேரம் வரை...

நாடக

பண்பாட்டுக் கழக தமிழீழத் துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் தொடக்கவுரையும் நிகழ்த்துவார்கள்.

கலை,பண்பாட்டுக்கழகவடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் திரு நா. பாஸ்கான், யாழ். பல்கலைக் கழக தமிழ்த் துறையைச் சேர்ந்த செல்வி க. சந்திரா, அரசியல் துறை, யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, கலை, பண்பாட்டுக் கழக தமிழீழப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்.

அரங்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசில்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வழங்குவார்.

கலை, பண்பாட்டுக் கழக வலிகாமக் கோட்டப் பொறுப்பாளர் திரு க. பொழிலன் நன்றியுரையாற்றுவார்.

இப்பரிசளிப்பு விழாவினைத் தொடர்ந்து, மேற்படி போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நாடகங்கள், கரகம், கோலாட்டம், காவடி, கும்மி போன்ற நிகழ்ச்சிகள் கலை நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

(வடமராட்சி)

புலோலி மிருக வைத்தியர் பணிமனையில் நேற்று காலை 9 00 மணியளவில் கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி வடமராட்சிக்கான கால் நடைச் சந்தை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இச்சந்தை திரு. தணிகாசலம் தலைமையில் வடமராட்சி தெற்கு பிரதேச செயலர் திரு. செ ஸ்ரீனிவாசன் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் திரு.வே. பூங்குன்றன் ஏற்றி வைத்தார்

தொடர்ந்து யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. சுவாமிநாதன், வடமராட்சி வடக்கு தெற்கு பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன், வடமராட்சி பொருண்மிய மேம்பாட்டுக்கழக இணைப்பாளர் திரு. வே பூங்குன்றன், கோப்பாய் மிருக வைத்திய அதிகாரி திருமதி தங்கராசா, ஓய்வு பெற்ற பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு பொ. பாலசிங்கம் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர் இப் பணிமனை வளவில் மரங்களும் நாட்டி வைக்கப்பட்டன.

## களுத்துறை

அரசின் நோக்கமாகும் எனத் தெரியவருகிறது

இவர்களைச் சென்று பார்வையிடுவதற்கு செஞ்சிலுவைக் குழுவிற்கு மாதம் ஒன்றிற்கு இரு தடவைகள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

## பிற்போடப்பட்டுள்ளது

24 10-93 அன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் உதயதாரகை சிறுவர் பாடசாலை கல்வி வளர்ச்சிக்காக நடைபெற இருந்த கலை விழா எதிர்வரும் 30-10 93 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

செயலாளர்
உதயதாரகை சனசமூக நிலையம்,
கோப்பாய்.

(6372)

## பிற்போடப்பட்டது

வடமராட்சிக் கோட்ட மனைப் பொருளியல் வள நிலையத் திறப்புவிழாவும் கண்காட்சியும் திட்டமிட்டபடி 27-10 93, 28 10-93 ஆகிய திகதிகளில் நடைபெறமாட்டாது. பிற்போடப்பட்டுள்ளது.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

திருமதி யோ. கந்தசாமி
சே. ப அ. ஆலோசகர்
மனைப்பொருளியல்

(சி/7776)

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

ROARING FIRE

[முழு நீள கராட்டிச் சித்திரம்]

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10-30 மணி, மாலை 4, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

பிற்பகல் 2. 30 மணிக்கு

விசேட காட்சிகளாகவும்

பருத்தித்துறை, கிளாலி

கடற்கரும்புலிகளின் தாக்குதல்,

சம்பவங்களை உள்ளடக்கிய

ஆகஸ்ட் மாத ஒளிவீச்சும்

காண்பிக்கப்படும்

(சி-7454)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ருவாண்டாவந்து சேர்ந்துள்ளனர்.

## ராவய

ஒருநாள் முழுவதும் தங்கியிருந்தோம்.

மறுநாள் அடம்பன் பகுதி முழுவதையும் சென்று பார்த்தோம் அது இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட பகுதியாகும். அங்கிருந்த இராணுவத்தினர் அப்பகுதியை விட்டு மன்னாருக்குச் சென்றிருந்தனர். மன்னார்மாவட்டத்தின் தலைமைச் செயலகமாக இருந்தபெரியபண்டிவிரிச்சான் முகாமில் வைத்து நாம் விசாணைக்குட்படுத்தப்பட்டோம். அதன்போது நாம் வடபகுதியில் என்ன நடைபெறுகிறது என்பதை அவதானிக்கவேண்டும். இதற்காக நாம் யாழ்ப்பாணம்செல்லவேண்டும்என்று கூறினோம. அத்துடன் எங்களிடமிருந்ததமிழ்ச்செல்வனின் கடிதத்தையும் காட்டினோம். தொடர்ந்து தமிழ்ச்செல்வனுடன் தாம் தொடர்புகொண்டு கதைக்கும்வரை அந்த முகாமிலேயே தங்கும்படி கூறினார்கள் நாம் அவர்களுடன் தங்கியிருந்தபோது அவர்கள் எம்மை நன்றாக உபசரித்தார்கள். உணவு வசதிகள் செய்து தந்தார்கள், தங்களால்முடிந்தளவு சகல வசதிகளையும் எமக்கு ஏற்படுத்தித்தந்தார்கள்.

எமது சவர்க்காரத்தைக்கூட பாவிக்கவேண்டாம் என்றுகூறி தமது சவர்க்காரத்தை எமக்குத் தந்தார்கள். அந்த முகாமில் நாம் இரு தினங்கள் தங்கியிருந்தோம்.

அந்த முகாமில் தங்கியிருந்தபோது மன்னார் மாவட்டத்தில் உள்ள இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்த்தோம் அடம்பன்என்ற பகுதியை இராணுவத்தினர் முழுமையாக நிர்மூலமாக்கியிருந்தனர். சுமார் 12 பகுதிகளுக்குத் தண்ணீர் விநியோகிக்கும் தண்ணீர்த் தாங்கி ஒன்று உடைத்து நொருக்கப்பட்டநிலையில் காணப்பட்டது. இது இப்பகுதியின் உச்சக்கட்ட அழிவாக காணப்பட்டது பொதுமக்கள் தண்ணீர் குடிப்பதற்குகூட தடைவிதிக்கும்நோக்குடனேயே ராணுவத்தினர் இத் தண்ணீர்த் தாங்கியை உடைத்துள்ளனர் என்று எமக்குத் தோன்றியது. அங்கிருந்தகட்டடங்கள்முழுவதும்சேதமாக்கப்பட்டிருந்தன, இராணுவத்திடமிருந்து விடுவிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் பலபகுதிகளுக்கு தற்போது மக்கள் சென்று குடியேறியுள்ளனர். தற்போது அவர்கள் மிகவும் சந்தோசமாக உள்ளனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவுப் பகுதிகளுக்குச் சென்ற நாம் விமானக்குண்டு வீச்சு நடைபெற்ற பகுதிகளைச் சென்று பார்த்தோம், திலீபன் நினைவு கூட்டம் ஒன்றின் மீது விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்ட இடத்திற்கும் சென்றோம், பாரியகிணறு தோண்டப்பட்டதுபோன்றுகுழிஒன்று காட்சியளித்தது, இவை விமானப்படைக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் விமானங்களினால் போடப்பட்டது.

இந் நினைவுக் கூட்டத்தில் நடந்த குண்டு வீச்சினால் 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 74பேர்படுகாயம் அடைந்தனர், அங்கு அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவு இடங்களைப் பார்க்கச் சென்றோம் விசேடமாக கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் 700 - 800 தூபிகள் காணப்பட்டன

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளும் வரை ஓரிரு தினங்கள் அங்கு தங்கும்படி கேட்டுக்கொண்டார். நாம் அங்கு நின்றபோது கிளிநொச்சி, பரந்தன் நகரங்களை பார்வையிட்டோம்.

பின்னர் நல்லூர் படகுத் துறைக்கு மாலை 6 மணியளவில் வந்தோம் அங்கு 4மணிநேரம் நாம் காத்திருக்க வேண்டியிருந்தது, நான் நினைக்கிறேன் 10நாட்களுக்கு மேல் படகு சேவை நடைபெற்றிருக்கவில்லை பல்லாயிரக்கணக்கான மக்கள் குஞ்சுப்பரந்தன் பகுதியை அண்டிய பகுதிகளில் தங்கியிருந்தனர் இப் படகுச்சேவை ஆரம்பமாகும் வரை கடைகளில் உணவருந்தி வெளிகளில் படுத்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது வயோதிபர்கள், சிறுவர்கள் பெண்கள் என்ற வேறுபாடின்றி பெருமளவு பொதுமக்கள் காணப்பட்டனர் பச்சிளம் பாலகர்கள் கூட அங்கிருந்ததை அவதானித்தோம் கொழும்பிலிருந்து இறந்தவரின் சடலமொன்றும் பெட்டியில் வைத்து கொண்டு செல்லப்பட இருந்தது,

இரவு 7-30 மணியளவில் பூநகரி முகாம் பகுதியில் இருந்து எறிகணை வீச்சு ஆரம்பிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் ஆனையிறவுப் பகுதியிலிருந்தும் எறிகணைகள் வரத்தொடங்கின இவை அனைத்தையும் கடற்கரையிலிருந்து பார்த்தபடி இருந்தோம்.கடற்கரையில் குறைந்தது ஒரு சிகரெட்டை புகைக்கக் கூட நாம் அனுமதிக்கப்படவில்லை ஏனெனில் சிறு வெளிச்சம்கூட இராணுவத்தின் தாக்குதலுக்குசாதகமாக அமையலாம் என்பதாலேயே அவ்வாறு தடுக்கப்பட்டது.

இரவு 8 00 மணியளவில் புக்காரா விமானமும் கடல் நீரேரிப் பகுதியில் கண்மூடித்தனமாக குண்டுவீசத்தொடங்கியது. பின்னர் உலங்குவானூர்தி ஒன்றும் கடற்பிரதேசத்தில் தாக்குதல் நடத்தியது. இவர்கள் இலக்காக எதையும் கொண்டதாக தெரியவில்லை.

குண்டு வீச்சு நடை பெற்றுக் கொண்டிருந்தபோது பொது மக்கள் கலவரமடையாமல் குண்டு வீச்சிலிருந்து தம்மை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நாம் புதிதாக இருந்தால் எமக்கு சிலவழிமுறைகளைச் சொல்லித் தந்தனர் எறிகணை, விமான தாக்குதல்கள் நாளாந்த நடைமுறை என பொதுமக்கள் பலரும் கூறினர்.

நாங்கள் படகில் சென்று கொண்டிருந்தபோது இருபக்கங்களிலுமுள்ள முகாம்களிலுமிருந்து தாக்குதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன விமானங்களும் தாக்குதல் நடாத்திக் கொண்டிருந்ன. இவ்வளவின் மத்தியிலும் ஒரு சதுரங்க நகர்வு போல படகுகள் ஓடிக்கொண்டிருந்தன. எமக்கு பின்னால் வந்த எட்டுபடகுகள் சேதமடைந்ததாக கேள்விப்பட்டோம். கிளாலி இறங்குதுறையை அடைந்தபோது அங்கு விடுதலைப் புலிகள் அங்கத்தவர்கள் மிக அன்புடன் வரவேற்றனர்.

இரவு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த நாம் அதிகாலையில் வெடிகுண்டின் பாரிய சத்தத்துடன் திடுக்கிட்டு எழுந்தோம் தீவுப்பகுதியிலிருந்து நகரத்தை நோக்கி ஏவப்பட்ட எறிகணை விழுந்து வெடிந்த சத்தம் என நாம் அறிந்தோம் நாம் யாழ்ப்பாணத்தில் நின்ற நாட்களில்எப்பகுதிக்குச் சென்றாலும் குண்டுச் சத்தங்களை கேட்கக்கூடியதாக இருந்தது. இராணுவ நடவடிக்கை நடந்தாலென்ன நடக்காவிட்டாலென்ன எறிகணைத் தாக்குதல்நாளாந்தம் நடைபெறும் ஒன்று எனயாழ்ப்பாண மக்கள் கூறினர்சிலநாட்களில்24 மணிநேரமும்இத்தாக்குதல் தொடர்கிறது

நாம் சிங்கள மக்களாக இருந்ததினால் எந்த நேரம் இராணுவத்தின் ஷெல் தாக்குதலால் காயமடைவோமோ என்றபீதியில் இருந்தோம் என செய்தியாளர்கள் அப்பேட்டியில் தெரிவித்தனர். இவர்களின் பேட்டியின் தொடர்ச்சி இன்றும் இரவு பி. பி.ஸியில் ஒலிபரப்பாகவுள்ளது

கடந்த ஒரு வருடமாக யாழ்ப்பாணம் செல்வதற்த தமக்கு அனுமதி வழங்கும்படி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தபோதிலும்எமக்குஅரசு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் எமது யாழ்ப்பாண விஜயம் இறுதி நேரம் வரை இரகசியமாகவே இருந்தது. நாம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும்சமயத்தில் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை நடைபெறும் என்று நாம்சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதியிடமும் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி தரும்படிகேட்டோம். நீங்கள் இலங்கைப்பிரஜைகள் எனவே நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்ல உங்களுக்குஉரிமை உண்டு நீங்கள் விரும்பினால் அங்குசெல்லலாம்என்று அவர் எமக்கு கடிதமூலம் தெரிவித்தார்.

இருந்த போதும் தமிழ்ச்செல்வன் எமக்கு அனுப்பிய அனுமதிப்பத்திரத்தை ஏற்றுக் கொண்ட பின்னரே மடுவரை செல்வதற்கு எமக்கு பாதுகாப்புஅமைச்சு அனுமதிவழங்கியது என அவர்மேலும் தெரிவித்தார்.

குக் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொழும்

எதிர்நோக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான சிரமங்களை நீக்கி பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பொருள்களை தருவிப்பதற்காக இப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி உட்பட மூன்று உத்தியோகத்தர்கள் கொழும்பு சென்று நீண்ட காலமாகி விட்டது ஆனால் இப்பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பொருள்களும் இங்கு தருவிக்கப்படவில்லை. கொழும்பு சென்ற உத்தியோகத்தர்களும் திரும்பவில்லை.

பல்கலைக்கழகத்தின் தேவை

ஒருங்கிணைப்புக் குழுவிடமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும் நிரந்தர அனுமதிபெறப்பட்ட பொருள்களின் பட்டியல் மேற்படி உத்தியோகத்தர்களின் கைவசம் இருக்கிறது ஆனால் அவ்வாறான பொருள்கள்கூட இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை. வேறுசில பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்பு களஞ்சியத்தில் வைக்கப் பட்டுள்ளன. இவ்வாறான நிலமையிலும் பொருள்கள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [க] (நி)

துறையைச் சேர்ந்த செல்வி க. சந்திரா, அரசியல் துறை, யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, கலை, பண்பாட்டுக் கழக தமிழீழப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்.

அரங்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசில்களை அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வழங்குவார்.

கலை, பண்பாட்டுக் கழக வலிகாமக் கோட்டப் பொறுப்பாளர் திரு க. பொழிலன் நன்றியுரையாற்றுவார்.

இப்பரிசளிப்பு விழாவினைத் தொடர்ந்து, மேற்படி போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நாடகங்கள், கரகம், கோலாட்டம், காவடி, கும்மி போன்ற நிகழ்ச்சிகள் கலை நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

## கடற்புலிகளின்

னாலும், அவர்களின் உயிர்த் தியாகங்களினாலும் தான் பொதுமக்கள் கிளாலி கடல் மார்க்கமாக பயணம் செய்கின்றனர் என்றார்.

## ஜனாதிபதியின்

கவும் இதனையடுத்தே பாதுகாப்பு மறுசீரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பீரங்கி தாக்குதல்

(குருநகர்)

நேற்று முன்தினம் முன்னிரவு 11-30 மணியளவில் மண்டைதீவு கிழக்குக் கடற்பிரதேசத்திற்கு வந்துசேர்ந்த பீரங்கிப் படகில் இருந்து பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 23.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11358

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

36-4842, 25-4538, 27-4920, 24-3906, 24-6480
26-3893, 40-2249, 26-4809, 24-0422, 43-3854
26-7546, 42-1320, 26-4579, 41 9746, 24 5623
26-0711, 26-5970, 28-9639, 24 4560, 22-4895
43-2666, 26 3410, 42-0970, 24-4282, 24 5877
26-4648, 26-8600, 26 1609, 26 4443, 26-1169
40-4429, 42 0526, 26-0786, 42 1059, 40 6979
22-8835, 27-7952, 26 0407, 26-5848, 26 7627

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24 7623, 27 7750, 42 2397, 26 7039, 24-7360
28 3676, 26 0536, 24-5416, 27 7627. இத்துடன்
கிளிநொச்சி கச்சேரி / 28.